# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-11 • Issue-11 • செப்டம்பர்-2025 • September -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com


## கோவையை கலக்கும் SP Dr.K.கார்த்திகேயன் IPS



## SMART KHAKI'S smart move



## க்ரேட் சல்யூட் திரு.சங்கர்ஜிவால் IPS

## வெல்கம் திரு. வெங்கட்ராமன் IPS



## வீரசோழன் ஆதுலர் சாலை

அரிய தகவல்

## நாகரிக கோமாளி ஆனோமுங்க..!



உங்களுக்கு வயது 50–ஐ நெருங்குதா?

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

செப்டம்பர் மாத சிறப்பு பலன்கள்








**AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU**

Affiliated to :

**AEROSKATOBALL FEDERATION OF INDIA**

No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

செப்டம்பர் 2025 மலர் 10 இதழ் 11



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன்,

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர்



அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.
Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,
Website.www.policeparvai.com



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only




# விதி, அதிர்ஷ்டம் என்றால் என்ன?

ஒருவர் மிக மிக நல்லவராக, தான தர்மங்களை செய்து வாழ்பவராக, பிறர் துன்பங்களை பொறுக்க முடியாமல் உதவிகள் செய்பவராக இருப்பார். ஆனால், அவருக்கு பல மன வேதனைகளும் சோதனைகளும் வருவது உண்டு. அவர் அவற்றை பொருட்படுத்தாமல் தன்னுடைய காரியத்திலேயே கண்ணாக இருப்பார்.

இந்த மனிதர் மிக நல்லவராக இருக்கிறார். ஆனால், ஏன் இவருக்கு மட்டும் இது போன்ற சோதனைகள் வருகின்றது என்று நினைப்பார்கள். இதை விதி என்பதா அல்லது துரதிஷ்டம் என்பதா என்று வாதிடுவார்கள். இப்படி பலரும் நம்மிடையே வாழ்கிறார்கள்.

விதி என்றால் என்ன? அதிர்ஷ்டம் என்றால் என்ன? இந்த சந்தேகம் பொதுவாக எல்லோருக்கும் எழுவதுண்டு.

நாம் செய்த வினைகளின் பயனாக ஏற்படும் இன்ப, துன்பங்களைத்தான் விதி என்றும், அதிர்ஷ்டம் என்றும் கூறுகிறோம். ஒவ்வொரு மனிதனின் மனதிலும் எத்தனையோ வாசனைகள் அல்லது எண்ணங்கள் உள்ளன. அவைதான் வாக்கினால் செய்யப்படும் கர்மங்களாகவும், உடலினால் செய்யப்படும் கர்மங்களாகவும் பரிணமிக்கின்றன. அவன் வாசனைகள் எப்படியோ, அது மாதிரித்தான் அவன் செய்யும் கர்மங்களும் இருக்கும்., அது மாதிரி பூர்வ ஜன்மத்தில், பலன் மீது உள்ள தீவிரமான ஆசையினால் பெருத்த முயற்சியின் பேரில் செய்யப்படும் கர்மம்தான் இந்த ஜன்மத்தில் விதியாக மாறுகிறது.

மனிதன் தனது முயற்சியினால் இந்த உலகில் எதையும் அடைய முடியும். விதியைக் கொண்டு முடியாது. முன் ஜன்ம வாசனைகள் அல்லது கர்மாக்கள் என்னும் நதி மனிதனை நல்ல வழியிலோ தீய வழியிலோ இழுத்துச் செல்லுகிறது.

ஆனால், மனிதன் முயற்சி கொண்டு அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். முயற்சி என்பது ஆன்மிக நாட்டமாகவும் இருக்கலாம்.

மனிதனுடைய மனது ஓர் குழந்தையைப் போன்று சஞ்சலமுடையது. அதைக் கெட்ட வழியிலிருந்து நல்ல வழிக்குத் திருப்பவும் முடியும் அதே மாதிரி நல்ல வழியிலிருந்து கெட்ட வழிக்கும் திருப்பலாம். ஆகவே, மனிதன் தனது முழு முயற்சியினால்தான் அதைக் கெட்ட வழியிலிருந்து நல்ல வழிக்கு திருப்ப வேண்டும். உலகில் மனிதன் எந்தெந்தக் காரியங்களில் ஈடுபடுகிறானோ, அதிலேயே தன்மயமாகி விடுகிறான். ஆகவே, நீ உன் முயற்சியைக் கொண்டு, இந்திரியங்களை அடக்கி, துக்கம் இல்லாத பதவியை அடை. பிறகு, அந்த நல்ல வாசனையையும் துறந்து பிரம்மத்தோடு ஐக்கியமாகு. நாம் செய்யும் கர்மங்கள் மற்றும் எண்ணங்களில் நாம் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில், அவைதான் பின்னர் விதியாக மாறி, நமக்கு இன்பத்தையோ, துன்பத்தையோ கொடுக்கப் போகின்றவையாக மாறுகிறது.

✍ ஆசிரியர்

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.



# வலி இல்லா வாழ்வு

ஒவ்வொரு நாளும் புத்துணர்ச்சியுடன், வலியில்லாமல் எழுந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் தெரியுமா?

மூட்டு வலி, கால்களில் கனத்த தன்மை, வேரிகோஸ் வெயின், தலைவலி. இவை எல்லாம் 50 வயதுக்கு பிறகு வாழ்க்கையை சிரமப்படுத்தும் 'விருந்தினர்கள்'. ஆனால், நல்ல செய்தி என்ன தெரியுமா?

உங்கள் சமையலறையிலேயே இருக்கிறது ஒரு சாதாரணமான சக்தி வாய்ந்த அறிவியல் ஆதரவு பெற்ற நிவாரணம்.

இஞ்சி, மஞ்சள், எலுமிச்சை. இந்த மூன்று இயற்கை ரத்தினங்கள் சேர்ந்து உங்கள் உடலை, மூட்டு வலியை குறைக்க, இரத்த ஓட்டத்தை மேம்படுத்த, தலைவலியை அடக்க, உடல் சுறுசுறுப்பை அதிகரிக்க, நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த, அப்படியே ஆரோக்கியமும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கை வாழ உதவும்.

எப்படி வேலை செய்கிறது?

மஞ்சள் – கர்குமின் என்ற இயற்கை மருந்து மூட்டு அழற்சியை குறைக்கிறது.

இஞ்சி – ஜிஞ்சரோல் என்ற சத்து வீக்கம், வலியை குறைக்கிறது.

எலுமிச்சை – வைட்டமின் சி இரத்த நாளங்களை பலப்படுத்தி ரத்த ஓட்டத்தை சீராக்குகிறது.

இவை மூன்றும் சேர்ந்து உங்களை இயற்கையாக வலியிலிருந்து விடுவிக்கின்றன.

என்ன செய்யனும்?

இஞ்சி + மஞ்சள் + எலுமிச்சை டீ.

சிறிய இஞ்சி துண்டை எடுத்து துருவிக் கொள்ள வேண்டும். அரை டேபிள் ஸ்பூன் மஞ்சள் தூள், அல்லது மஞ்சள், எலுமிச்சை பழத்தை பாதியாக அரிந்து அதன் சாறு, ஒரு கப் தண்ணீர், தேவைப்பட்டால் 1 ஸ்பூன் தேன், சிறிது மிளகு தூள் (curcumin absorption அதிகரிக்க) ஆகியவற்றை கொதிக்க வைத்து 5 நிமிடம் ஊற வைத்து காலை அல்லது இரவு குடிக்கவும்.

பயன்கள்:

2 வாரங்களில் மூட்டு வலி, மூட்டு இறுக்கம் குறையும், கால்கள் லேசாகும், ரத்த ஓட்டம் அதிகரிப்பதால் வெரிகோஸ் வெயின் வலி குறைந்து நரம்புகளுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். தலைவலி, உடல் சோர்வு குறையும், தினமும் நமக்கு தேவையான இயற்கை சக்தி கிடைக்கும்.

மருந்து மாத்திரைகளுக்கு அடிமையாவதற்கு பதில் சமையலறையிலிருந்து வரும் இந்த ரகசியத்தை தினமும் பயன்படுத்திப் பாருங்கள். இயற்கையிலிருந்து நமக்கு கிடைக்கும் நலன்களை அனுபவிக்க இது சரியான நேரம்.

வலி இல்லா வாழ்க்கையைத் துவங்குங்கள் உங்கள் கையில் இந்த டீயுடன்.



# க்ரேட் சல்யூட் திரு.சங்கர்ஜிவால் IPS

# வெல்கம் திரு.ஜி.வெங்கட்ராமன் IPS

இந்திய காவல் பணியில் 35 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி காவல் துறை இயக்குநர், காவல் படைத் தலைவர் திரு.சங்கர்ஜிவால் ஐபிஎஸ் கடந்த 31 ஆகஸ்ட் 2025-ம் தேதியுடன் பணி நிறைவு பெற்றார். தனது சிறப்பான பணிக்காலத்தில் சேலம், மதுரை மாவட்டங்களில் காவல் கண்காணிப்பாளராகவும் மதுரை மாநகர காவல் துணைத் தலைவராகவும் மற்றும் சென்னை போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகத்தில் மண்டல இயக்குநராகவும் பல்வேறு பிரிவில் பணியாற்றியுள்ளார். மத்திய பணியிருந்து திரும்பிய பிறகு, திருச்சி மாநகர காவல் ஆணையராக பணிபுரிந்தும் நுண்ணறிவுப் பிரிவில் காவல் துணைத் தலைவர் மற்றும் காவல் துறை தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

காவல் துறை தலைவராக உள்நாட்டு பாதுகாப்பிலும் நுண்ணறிவுப் பிரிவிலும் சிறப்பு இலக்குப் படை தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். மேலும், சென்னை பெருநகர காவல் துறையின் ஆணையராகவும் 2 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவர் 2 ஆண்டு களுக்கு மேலாக மாநில காவல் துறைக்கு தலைமை தாங்கிய பின்னர் இறுதியாக காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல் படைத் தலைவராக இருந்து பணி நிறைவு பெறுகிறார்.

மாநில காவல் துறைத் தலைவராக இருந்த காலகட்டத்தில் சட்டம் ஒழுங்கை திறம்பட பராமரிப்பதை உறுதி செய்தார். மேலும், காவல் துறையில் தொழில்நுட்ப பயன்பாடுகள், பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காணுதல், வழக்கமான போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள், சைபர் குற்றங்கள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு எதிரான பெரிய அளவிலான விழிப்புணர்வு திட்டங்கள், பொதுமக்களை கையாள்வதில் காவல்துறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நீதிமன்றத்தில் வழக்குகளை திறம்பட நடத்துவது மற்றும் காவல் துறையினருக்கான பல நலத்திட்ட முன் மயற்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இவர் எடுத்துள்ளார்.

காவல் துறையில் அவரது புகழத்தக்க பணிக்கு பிறகு, புதிதாக அமைக்கப்பட்ட தீயணைப்பு ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்க உள்ளார்.

அவரின் பணி ஓய்வுக்குப் பிறகு இப்பொறுப்பு திரு.ஜி.வெங்கட்ராமன் IPS-யிடம் ஒப்படைக்கப்படுகிறது. 1994-ம் ஆண்டில் பணியில் சேர்ந்த இவர் காவல் கண்காணிப்பாளராக பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களிலும், மதுரை மாநகர சட்டம் ஒழுங்கில் காவல் துணை ஆணையராகவும் மற்றும் மத்திய புலனாய்வுப் பிரிவிலும் பணியாற்றியுள்ளார்.




மேலும் காவல் துணைத் தலைவராக சேலம் சரகத்திலும் மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துறையிலும் பணியாற்றியதோடு காவல் துறை தலைவராக ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறையிலும் பணிபுரிந்துள்ளார். மேலும், காவல் துறை கூடுதல் இயக்குநராக சைபர் குற்றப் பிரிவிலும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையிலும் பணிபுரிந்துள்ளதோடு, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் காவல் தலைவர், காவல் கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் இயக்குநர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

தமிழ்நாடு காவல் துறை ஒரு புகழ் பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது. நம் நாட்டின் சிறந்த காவல் துறையாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தமிழக முதல்வரின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின்கீழ் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதிலும் குற்றங்களை தடுப்பதிலும் தமிழ்நாடு காவல் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வருகிற காலங்களில் தமிழ்நாடு காவல் துறை தனது செயல் திறனை மேம்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளும். திரு.சங்கர் ஜிவால் IPS அவர்கள் தனது பொறுப்பை ஒப்படைக்கும் நிகழ்வில் காவல் துறையின் மூத்த அதிகாரிகள் மற்றும் டிஜிபி அலுவலக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதன்மை ஆசிரியர்: **S.முருகானந்தம்**, சென்னை



சோழா 2024

# தேனி ஊர்க்காவல் படையினருக்கு SP Dr.B.சினேஹா ப்ரியா IPS பாராட்டு

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 22.08.2025 முதல் 24.08.2025 வரை நடைபெற்ற 29-வது ஊர்க்காவல் படையினருக்கான மாநில அளவிலான தொழில்முறை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது (சோழா-2024). இதில் கலந்து கொண்ட திண்டுக்கல், தேனி மாவட்ட ஊர்க்காவல் படையினர் தொழில்முறை மாநில அளவில் முதலிடம் பிடித்தனர். தேனி மாவட்ட ஊர்க்காவல் படையினரை நேரில் அழைத்த SP Dr.B.சினேஹா ப்ரியா IPS அவர்கள் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

நிகழ்வின்போது, ஊர்க்காவல் படை சரக உதவி தளபதி திரு.N.A.அஜய் கார்த்திக் ராஜா, வட்டார தளபதி திரு.D.செந்தில்குமார் மற்றும் ஆயுதப்படை துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.M.ராஜன் மற்றும் ஊர்க்காவல் படை துணை வட்டார தளபதி திருமதி.N.B.நிவேதா, ஆயுதப்படை ஆய்வாளர் திரு.S.ஜெயச்சந்திரன், சார்பு ஆய்வாளர் திரு.S.ஜாகிர் உசேன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

நிருபர்: **R.குப்புசாமி**

# இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் சொல்லுங்க..

## மதுரை 'காவல் கரங்கள்' கோரிக்கை

மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், மாட்டுத்தாவணி பேருந்து நிலைய பகுதியில், மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த திரு. முனுசாமி (எ) முனீஸ் என்ற நபரை குழந்தைகள் மற்றும் ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான 'காவல் கரங்கள்' அமைப்பைச் சேர்ந்த காவலர்கள் மீட்டனர்.

அவருக்கு முதலுதவி அளித்து, 'உறவுகள்' அறக்கட்டளை ஆம்புலன்ஸ் உதவியுடன் மருத்துவ சிகிச்சைக்காக நாகதீர்த்தம் அக்ஷாயா ஹோமில் சேர்த்தனர்.

இவர் குறித்து விசாரித்ததில், சோழவந்தான் பகுதியை சேர்ந்தவர் என்பதை தவிர, வேறு எந்த விவரமும் தெரியவில்லை. மேற்கண்ட நபர் குறித்து





தகவல் தெரிந்தால் மதுரை மாநகர 'காவல் கரங்கள்' அமைப்பை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட நபருக்கு உதவிய காவல் ஆணையர் அவர்கள் மற்றும் காவலர்களின் செயலை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

காவல் கரங்கள் அமைப்பின் இலவச தொலைபேசி எண்: 1800-8892-098, 6369860806 மற்றும் சமூக வலைதள முகவரிகளான, முகநூல்: Kaval Karangal (Madurai City), இன்ஸ்டாகிராம் Kaval Karangal (@ kavalkarangal-maduraicity டுவிட்டர், X- Kaval Karangal Maduri City (@ kavalkarangalMC) ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

சிறப்பு நிருபர்: **J.பீமராஜ்,** மதுரை.

நல்ல வேளை,
நர்சிங்
படிச்சிருந்ததால
சமாளிச்சிட்டோம்..

# காவல் பணியுடன் மருத்துவ உதவி

## ஆட்டோவில் பெண்ணுக்கு பிரசவம்; பாராட்டிய DGP திரு.சங்கர் ஜிவால் IPS



திருப்பூர் மாநகரில் சுதந்திர தினத்தன்று இரவு ரோந்து பணியில் ஆயுதப்படை பெண் காவலர் கோகிலா ஈடுபட்டிருந்தார். இரவு 12 மணியளவில் சாலையில் செல்லும் ஆட்டோ ஒன்றில் பெண் ஒருவரின் சத்தம் கேட்டுள்ளது.

காவல் கோகிலா, ஆட்டோவில் சென்று பார்த்தபொழுது, சத்தமிட்ட அந்த பெண் நிறைமாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். அவரை மகப்பேறு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தனர். ஆனால், மருத்துவமனை செல்லும் வரை அந்த பெண்ணின் மகப்பேறுக்கு நேரம் இல்லை என்பதை அறிந்து கொண்ட கோகிலா, குழந்தை வெளியே வரும் தருவாயில் இருந்ததினால் தானே பிரசவம் பார்க்க முடிவெடுத்தார்.

இதில் முக்கியமான செய்தி என்னவென்றால் கோகிலா ஏற்கெனவே செவிலியர் பயிற்சி முடித்தவர். அந்த அனுபவத்தில் ஆட்டோவில் இருந்த பெண்ணுக்கு நல்லபடியாக பிரசவம் பார்த்து குழந்தையை வெளியே எடுத்துள்ளார்.

பிறகு அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவருடன் இணைந்து தொப்புள் கொடியை அகற்றி, குழந்தையும் தாயும் சுகமாக இருக்குமாறு உதவியுள்ளார். ஆட்டோவில் பெண்ணுக்கு பிரசவம் பார்த்த பெண் காவலர் கோகிலாவின் செயலுக்கு பாராட்டு குவிந்த வண்ணம் இருந்தது. காவல் துறை அதிகாரிகளும் பொதுமக்களும் கோகிலாவை பாராட்டினார்கள் வாழ்த்தினார்கள்.

இந்த நற்செயலை பாராட்டும் விதமாக DGP திரு.சங்கர் ஜிவால் IPS அவர்கள் கோகிலாவை நேரில் வரவழைத்து பாராட்டு சான்றிதழ் வழங்கி வாழ்த்தினார்.

தலைமை நிருபர்: **A.மாரிராஜா,** திருப்பூர்



மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (106)

விளக்கம்:உன் துன்பத்துள் துணையாக நின்றவரின் நட்பை விடாதே; அறிவு ஒழுக்கங்களில் குற்றம் இல்லாதவரின் நட்பை மறந்து விடாதே.

# வீரசோழன் ஆதுலர் சாலை

சோழர் காலத்தில் நோயுற்றவர்கள் சிகிச்சை பெறும் ஏராளமான மருத்துவமனைகள் இருந்ததை கல்வெட்டுகள் பதிவு செய்கின்றன. அடிப்படை சிகிச்சை முதல் அறுவை சிகிச்சை வரை அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

மருத்துவமனைகள் ஆதுலர்சாலை மற்றும் ஆதுரச்சாலை என அழைக்கப்பட்டன. நோயாளிகள் தங்கி சிகிச்சைபெற படுக்கை வசதிகள் இருந்தன. சிகிச்சை பெறுபவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன. போதுமான மருந்துகள் இருப்பில் இருந்தன. அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. மருத்துவர் மற்றும் ஊழியர்களுக்கு நிறைவான ஊதியம் அளிக்கப்பட்டு அவர்களது வாழ்வாதாரம் உறுதிசெய்யப்பட்டது.

**கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட மருத்துவமனை விபரங்கள்**

தஞ்சை தேவராயன்பேட்டையில் சோழ இளவரசி குந்தவை நாச்சியார் ஒரு மருத்துவமனை கட்டினார். தனது தந்தையின் பெயரைச் சூட்டினார். சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலை என்று பெயரிட்டார். இம்மருத்துவமனை பராமரிப்புக்காக ஏராளமான நிலங்களை தானமாகக் கொடுத்தார். சிக்கலான அறுவை சிகிச்சை முறை மருத்துவம் சல்லியகிரியை என்றழைக்கப்பட்டது. இச்சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு வைத்தியபோகம் என்னும் பெயரில் மிகப்பெரும் ஊதியம் வழங்கப்பட்டது.





இந்த சிகிச்சைக்கு கத்தி, துணி, மருந்து முதலான பொருட்களைக் கொண்டு வந்து சிகிச்சை செய்பவர் அம்பட்டன் என்னும் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர்களுக்கும் இவர்கள் குடும்பத்தாருக்கும் பெரும் நிலங்களைத் தானமாக வழங்கினார் குந்தவை நாச்சியார். திருவிசலூர் கல்வெட்டு இச்செய்தியை பதிவு செய்கிறது.

“அம்பட்டன் அரையன் உத்தமச்சோழனான இராஜேந்திரசோழ பிரயோதரையன் என்பவருக்கும் இவரது வம்சத்தார்க்கும் ஒரு வேலி 4 மா நிலமும் ஒரு வீடும் சல்லியபோகமாக வழங்கப்பட்டது”

மருத்துவர்களுக்கு ஊதியம், படுக்கை வசதி, நோயுற்றவர்களுக்கு இலவச உணவு, மருந்துகள் விபரம், சிகிச்சைமுறை இதுபோன்ற மருத்துவமனைகள் பற்றிய செய்திகளைப் பதிவு செய்யும் கல்வெட்டுகள் ஏராளமாக உள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம் திருமுக்கூடல் என்னும் ஊரில் 950 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சோழர்கால மருத்துவமனை செயல்பட்டுள்ளது. இன்றைய மல்டி ஸ்பெஷாலிட்டி என்று சொல்லப்படும் பல்நோக்கு உயர் மருத்துவமனையாகும். மருத்துவமனையின் பெயர் ‘வீரசோழன் ஆதுலர் சாலை’.

# தென்காசியில் சுதந்திர தினம்

## பங்கேற்ற ஆட்சியர் திரு.கமல் கிஷோர் IAS




நாட்டின் 79-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தென்காசி இ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் சுதந்திர தின விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட ஆட்சியர் திரு.கமல் கிஷோர் IAS அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தென்காசி SP திரு.S.அரவிந்த் அவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்.அதில் தென்காசி மாவட்ட காவல் துறையில் புளியங்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.மாரிச்செல்வி அவர்களுக்கு சிறந்த காவல் பணிக்காக நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள் என்பது குறிப்பிடதக்கது

சட்ட ஆலோசகர் **K.அருணாச்சலம்,** தென்காசி



## பணத்தை இழந்தவரிடம் மீட்டு மீண்டும் ஒப்படைத்த SP Dr.M.சுதாகர் IPS காவல் குழுவினர்

திருவண்ணாமலை மாவட்டத்தில் சைபர் மோசடி வழக்கில் இழந்த பணத்தை மீட்டு கொடுக்குமாறு சைபர் குற்றப்பிரிவு இணையதளமான www.cybercrime.gov.in மற்றும் 1930 என்ற இலவச தொலைபேசி எண்ணிற்கு புகார் வந்தது.

இதன் அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்ட SP Dr.M.சுதாகர் IPS அவர்களின் அறிவுறுத்தலின்படி, சைபர் குற்றப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.M.பழனி அவர்களின் மேற்பார்வையில் சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.கவிதா அவர்களின் தலைமையிலான சைபர் குற்றப்பிரிவு போலீஸார் உரிய விசாரணை செய்து, துரிதமாக செயல்பட்டு அவர் இழந்த பணத்தை வங்கியின் உதவியுடன் மீட்டனர்.

இதனை தொடர்ந்து கடந்த 19.08.2025- அன்று திருவண்ணாமலை மாவட்ட SP Dr.M.சுதாகர் IPS அவர்கள் பணத்தை இழந்த நபரை நேரில் அழைத்து மீட்கப்பட்ட ரூ.6,35,000/-ஐ ஒப்படைத்தார்.

சிறப்பு நிருபர்: **இரா.சக்திவேல்**
திருவண்ணாமலை.



# உங்க நாக்க நீட்டுங்க..



உடம்பு சரி இல்லாத நேரத்தில் மருத்துவரை அணுகும்போது அவர் முதலில் பார்ப்பது நமது நாக்கைதான். அதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் பின்வரும் சிலவும் அதற்கு முக்கிய காரணம். அதாவது உங்கள் நாக்கு இருக்கும் நிறத்தை வைத்தே உங்களுக்கு என்ன மாதிரியான பிரச்சனை என்பதை கணிக்க முடியுமாம்.

**சிவப்பு நிற நாக்கு**

உங்கள் நாக்கு அதிக சிவப்பு நிறத்தில் இருந்தால் அது தொற்று நோய் மற்றும் அலர்ஜி ஏற்பட்டுள்ளது என்பதை குறிக்கிறது.

**மஞ்சள் நிற நாக்கு**

நாக்கு மஞ்சள் நிறத்தில் இருந்தால் அது வயிறு அல்லது கல்லீரல் தொடர்பான நோய் உள்ளதற்கான அறிகுறியாம்.

**பிங்க் நிற நாக்கு**

உங்கள் நாக்கு பிங்க் நிறத்தில் இருந்தால் உங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. உங்கள் உடல் ஆரோக்கியமாக உள்ளதாக அர்த்தம்.

**இளம் சிவப்பு நிறமுள்ள நாக்கு**

இளம் சிவப்பு நிறத்தில் நாக்கு இருந்தால், அது இதயம் மற்றும் ரத்தம் தொடர்பான நோய் உள்ளதை குறிக்கிறது.

**வெள்ளை நிற நாக்கு**

ஒருவேளை உங்கள் நாக்கு வெளிர் வெள்ளை நிறத்தில் இருந்தால் உங்கள் உடலுக்கு நீர் சத்து குறைவாக உள்ளது என்றும் நுண்ணிய கிருமிகளின் தொற்று மற்றும் காய்ச்சல் இருப்பதையும் குறிக்கிறது.

**காபி நிறமுள்ள நாக்கு**

நாக்கின் நிறம் காபி நிறத்தில் இருந்தால், ஒருவேளை அது நுரையீரல் பாதிப்பு உள்ளது என்பதை குறிக்கிறது.

**சிமெண்ட நிறமுள்ள நாக்கு**

உங்க நாக்கு சிமெண்ட் நிறத்தில் இருந்தால், அது செரிமானம் மற்றும் மூலநோய் உங்களுக்கு உள்ளது என்பதை குறிக்கிறது.

**நீலம் நிறமுள்ள நாக்கு**

நாக்கின் நிறம் நீலமாக இருந்தால், அவர்களுக்கு சிறுநீரகத்தில் பாதிப்பு உள்ளது என்பதை குறிக்கிறது.

சிறிய சிறிய குமிழ்கள் உள்ள நாக்கு நீரிழிவு பிரச்சினைகள் இருக்கிறது என்று அர்த்தம்.




## இது யதார்த்தமான கதை

ஒரு 83 வயது பாட்டி, படுக்கையில் படுத்துக்கொண்டு, தனது 87 வயதான கணவரிடம் கூறினார்:

"இங்க பாருங்க, நான் ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன், கேரேஜ் லைட் அணைக்க வில்லைன்னு நினைக்கிறேன். நீங்க போய் கேரேஜ் லைட்டை ஆஃப் பண்ணிட்டு வாங்க".

முதியவர் மிகவும் சிரமப்பட்டு படுக்கையில் இருந்து எழுந்து, ஜன்னலைத் திறந்து பார்த்தார்,

ஐந்தாறு திருடர்கள் தனது கேரேஜ் கதவை உடைக்க முயற்சிப்பதைக் கண்டார்.

பெரியவர் அங்கிருந்து அருகில் உள்ள காவல் நிலையத்தை ஃபோனில் அழைத்தார்: "ஹலோ......எனது முகவரியை எழுதிக் கொள்ளுங்கள். வீட்டில் நாங்கள் இரண்டு வயதான கணவன் மனைவி மட்டுமே இருக்கிறோம். இப்போது ஐந்து அல்லது ஆறு திருடர்கள் எங்கள் கேரேஜ் கதவை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு போலீஸ் குழுவை சீக்கிரம் அனுப்புங்கள்."

மறுபக்கத்திலிருந்து காவல் அதிகாரியின் குரல் வந்தது: "உங்கள் முகவரியை குறித்துக் கொண்டோம். எங்களிடம் தற்போது காவலர்கள் யாரும் இல்லை. நாங்கள் ஒரு போலீஸ் டீமுடன் தொடர்பு கொண்டவுடன், அவர்களை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறோம்."

இதைக் கேட்டு, பெரியவர் ஏமாற்றம் அடைந்தார், ஆனால் மறுபுறம், கேரேஜின் பூட்டை உடைக்கும் பணியில் திருடர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, பெரியவர் மீண்டும் காவல் நிலையத்தை அழைத்தார்:

"அய்யா.....இப்போது யாரையும் அனுப்ப வேண்டியதில்லை. ஐந்து திருடர்களையும் சுட்டு விட்டேன்" என்று நிதானமாகக் கூறினார்.

போலீஸ் ஸ்டேஷனில் ஒரே பரபரப்பு. ஐந்து நிமிடங்களில், ஒரு போலீஸ் குழு, ஒரு ஹெலிகாப்டர், ஒரு துணை மருத்துவர், மூன்று டாக்டர்கள் மற்றும் இரண்டு ஆம்புலன்ஸ்களுடன், முதியவரின் வீட்டை அடைந்தது. 5 திருடர்களும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் போலீஸ் குழுவின் தலைவர் பெரியவரை அணுகி கேட்டார், "நீங்கள் அந்த ஐந்து திருடர்களையும் சுட்டுக் கொன்றதாகச் சொன்னீர்கள், ஆனால் நாங்கள் அவர்களை உயிருடன் பிடித்துள்ளோமே?"

முதியவர் பதிலளித்தார்: "நீங்கள் கூடத்தான் சொன்னீர்கள் போலீஸ் டீம் எதுவும் இல்லை என்று".

மூத்த குடிமக்களை குறைத்து மதிப்பிடாதீர்கள்.

தக்க சமயத்தில் பாதுகாப்பு அளிப்பதே காவல் துறையின் கடமை.





# நோயல்ல நீரிழிவு குறைபாடு

எனக்கு தெரிந்த உறவினர் ஒருவருக்கு ஏழு வருடங்களாக சக்கரை நோய் இருந்தது. உண்மையில் சக்கரை நோய் என்பது ஒரு நோய் அல்ல. நமது உடலில் சக்கரையின் அளவு அதிகமானால் வரும் பாதிப்பு. சக்கரையின் அளவை சரி செய்தால் போதும்.

அதன் அந்த அளவை எப்படி சரி செய்வது. எவ்ளோ மாத்திரை, இன்சுலின் செலவு செய்வது. சரியாகவே இல்லை. இதற்க்கு ஒரு தீர்வே இல்லையா?

இருக்கிறது. எனக்கு தெரிந்தவருக்கு இருந்த சர்க்கரை அளவு 440. ஒரே மாதத்தில் அது 240- ஆனது எப்படி?

எங்களது ஒரு குடும்ப நண்பரின் ஆலோசனைப்படி நிலவேம்பை அவர் தினமும் சாப்பிட்டு வந்தார். அவருக்கு மட்டும் அல்லாமல் எனது அத்தைகளும் நிலவேம்பு கஷாயம் குடித்ததன் பலனாக இன்று சக்கரை வியாதி பூர்ணமாக குணம் அடைந்து விட்டது.

நிலவேம்பு உடலில் உள்ள சக்கரை அளவை கட்டுப்படுத்துவதை மட்டும் செய்வதில்லை. உடல் வலிமை, குடல் பூச்சிகள் அழிய, டெங்கு, பன்றி காய்ச்சல் போன்ற அனைத்து கொடிய வியாதிகளையும் தீர்க்கும் சர்வ ரோக நிவாரணி நிலவேம்பு. டெங்கு காய்ச்சல் தமிழகத்தில் பரவிய சமயத்தில், அதற்க்கு நிலவேம்பு மிக சிறந்த மருந்து என்று தமிழக அரசே அறிவிப்பு வெளியிட்டது உங்களில் சிலருக்கு நியாபகம் இருக்கலாம்.

**இதை எவ்வாறு பயன்படுத்துவது**

இவற்றோடு கொத்தமல்லி, கிச்சலி தோல் எல்லாம் சேர்க்க வேண்டும் என்று சிலர் சொல்வார்கள். தேவையில்லை. 2 டம்ளர் நீரில் அதிகபட்சம் 15 கிராம் நிலவேம்பு பொடியை போட்டு கொதிக்க வைத்து அருந்த வேண்டும். 15 கிராமுக்கு மேல் போட்டால் ஓவர் டோஸ். பன்படுத்துவோரின் வயதுக்கு தகுந்தார் போல் கொஞ்சம் கூடலாம், குறையலாம்.

10 கிராம் என்பது சிறுவர், பெரியவர் அனைவருக்கும் ஏற்று கொள்ளும் சரியான டோஸேஜ். வாரத்திற்கு ஒருமுறை நீங்கள் உங்கள் சக்கரையின் அளவை சோதனை செய்யுங்கள். அதற்கு தகுந்தார் போல் நீங்கள் அதிகரித்து கொள்ளலாம். ஆனால் அதிக பக்சம் 15 கிராம் தான். வெறும் வயிற்றில் எடுத்து கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்திற்கு இனிப்பாக இருக்கும் பெரும்பாலானவை நாவிற்க்கு கசப்பாகவே இருக்கும். நிலவேம்பும் அதற்கு விதி விலக்கல்ல. நிலவேம்போடு தேனை சிறிது கலந்து குடித்தால் அது இனிப்பாகவும் இருக்கும். நிலவேம்பின் மருத்துவ குணத்தை சற்று கூட்டுவதாகவும் இருக்கும்.

சரி. சக்கரை வியாதி உள்ளவர்கள் நிலவேம்பில் தேன் கலந்து குடித்தால் சக்கரை வியாதி குணம் அடையுமா. என்னும் சந்தேகம் வரலாம். நிச்சயம் குணம் அடையும். நிலவேம்பின் மருத்துவ குணத்தை முறிக்கும் அளவு சக்தி தேனுக்கு இல்லை.

*விலைமதிப்பற்ற செல்வம் அறிவு,*
*பலமான ஆயுதம் பொறுமை,*
*அற்புதமான மருந்து புன்னகை,*
*மனித மனதுக்கு மகிழ்வை தரும்*
*புன்னகையுடன் மகிழ்ச்சியாக வாழ்வோம்!*



**ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**

# காட்டிக் கொடுத்த சிசிடிவி கேமரா

## புளியங்குடியில் கடையில் திருடியவரை கைது செய்து காவல் துறையினர் அதிரடி



தென்காசி மாவட்டம் புளியங்குடியில் கடந்த 16.08.2025 அன்று ஒரு கடைக்குள் மர்ம நபர் அத்துமீறி நுழைந்து, அங்கு வைத்திருந்த பணத்தை திருடியுள்ளார். அதைத் தொடர்ந்து, உரிமையாளர் ஷேக் மொய்தீன் புளியங்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

புகாரின்பேரில், காவல் ஆய்வாளர் திரு.ஷாம்சுந்தர் அவர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.மாடசாமி ஆகியோர் தலைமையிலான காவல்துறையினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டு, கடையில் உள்ள சிசிடிவி கேமராவை ஆய்வு செய்து, பணத்தை திருடிய ராஜபாளையம் அயன் கொல்லன் கொண்டான் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த அய்யனார் மகன் பொன்ராஜ்(42) என்பவரை கைது செய்தனர். மேலும் அவர் திருடிய சென்ற பணம் பறிமுதல் செய்யப்பட்டது. சிறப்பாக விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்ட காவல்துறையினரை அப்பகுதி பொதுமக்கள் பாராட்டினர்.

நிருபர்: **V.ஆறுமுகச்சாமி** புளியங்குடி





**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

**editorpoliceparvai@gmail.com**

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**





# யோகி பரமஹம்ச யோகானந்தா மகா சமாதி

யோகி பரமஹம்ச யோகானந்தா தன் உடலை விட்டு நீங்கும்பொழுது, அவர்முன் 700 பேர் இருந்தனர். அமெரிக்காவில், போஸ்டன் நகரில், அவர் மஹாசமாதி அடைந்தார்.

தான் உடலை விடும் முன்பே, 'நான் உடலை விடப்போகிறேன்' என்று அவர் அறிவித்திருந்ததால், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் என பலரும் அங்கே வந்து அமர்ந்திருந்தனர். வந்தவர்களுடன் சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு, 'இப்போது என் உடலை நான் விடப்போகிறேன்' என்று சொல்லி, பத்மாசனத்தில் அமர்ந்து, தன் உடலை நீத்தார்.

மருத்துவர்கள் எத்தனை சோதனை செய்தாலும் அவர்களுக்கு புலப்படாத ஒரு விஷயமிது. ஏனெனில், மருத்துவ அறிவியலைப் பொறுத்தவரை, உடலில் ஏதேனும் சிதைவு ஏற்பட்டு, உடல் இயங்க முடியாத நிலையில் மட்டுமே உயிர் பிரியும் என்று நம்பப்படுகிறது.

இதயமோ, நுரையீரலோ, வேறு எதோ ஒன்று கெட்டுப்போனால் உயிர் நீங்கும் என்பது அவர்களது நம்பிக்கை. நன்றாக, ஆரோக்கியமாக இருக்கும் ஒருவர், 'இப்போது நான் போகப்போகிறேன்' என்று சொல்லிவிட்டு, தன் உடல் நீப்பதை அவர்கள் எங்கும் பார்த்திருக்கவில்லை.

அதுமட்டுமில்லை, பரமஹம்ச யோகானந்தா உடலை விடும்போது, "33 நாட்களுக்கு பிறகுதான் இவ்வுடலை அடக்கம் செய்ய வேண்டும், அழிந்து போகாத இவ்வுடலை அப்படியே வைத்துக் கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு உடலை நீத்தார்.

உடலில் தேவையான அளவிற்கு வியானப் பிராணாவை அவர் தக்கவைத்துச் சென்றதால், இத்தனை நாட்களுக்கு பிறகும் உடல் நன்றாக இருக்கும். இதைச் செய்வதற்கு அவருக்கு எவ்வித அவசியமும் இல்லை. ஆனால், அவர் உயிரோடு இருக்கும்போது, காரண அறிவை மட்டுமே பயன்படுத்தும் விஞ்ஞானிகள்/மனிதர்கள் பலர், அவருக்கு அதிகளவில் தொல்லைகள் தந்தனர். அதனால் போகும்போது, அவர்களுக்கு கொஞ்சம் விளையாட்டுக் காட்டிவிட்டுச் செல்லலாம் என்று அவர் முடிவு செய்தார்.

காரண அறிவை மட்டுமே பயன்படுத்தி அவரைப் பற்றி இல்லாததை எல்லாம் பேசிய விஞ்ஞானிகளுக்கு, புரியவைத்துப் போகலாம் என்றெண்ணி, 30 நாட்கள் உடல் அப்படியே இருக்கும், அனைத்து சோதனைகளையும் நன்றாக செய்து கண்டு பிடியுங்கள் பார்க்கலாம் என்று சொல்லி, உடலை விட்டுப் போனார் அவர். அவர் உடல் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் இன்றும் அழிவில்லாமல் அப்படியே இருக்கிறது. இவரது குரு யுக்தேஸ்வரகிரியும் இவரை போலவே தன் உடலை துறக்க போவதை முன்கூட்டியே அறிவித்தார். மேலும் அவர் உடலை துறந்த மறுநாளே பரமஹம்ஸ யோகானந்தருக்கு தன் உடலோடு காட்சி கொடுத்தார்.

ஒவ்வொரு யோகியும் தன் உடம்பை கை விடும் நிலை தனித்துவமானது. மகா சமாதி என்றழைக்கப்படும். தன் உடலை ஒரு சட்டையை கழற்றுவது போல நீக்கிவிட்டு சென்றுவிடுவர். அது மரணமல்ல-சாகாநிலை-மரணமில்லா பெருவாழ்வு.

கபீர் தாசர் மறைந்த இடத்தில வெறும் ரோஜா பூக்களே இருந்தன. ரமணர் மறைந்த பொழுது ஒரு ஒளி தோன்றி திருவண்ணாமலையில் மறைந்தது. பட்டினத்தார் பிரம்பு கூடைக்குள் புகுந்து திருவொற்றியூர் கடற்கரையோர சிறுவர்களுக்கு விளையாட்டு காட்டி அந்த கூடைக்குள்ளிருந்தே மறைந்து போனார். தன் அடையாளம் அழித்து பூரணமான அவரின் அடையாளமாக, அவர் மறைந்த இடத்தில ஒரு சிவலிங்கம் இருந்தது.

மாணிக்கவாசகர் சிதம்பரம் நடராஜர் சன்னதி கருவறையில் வெட்டவெளியில் ( வான் பொருள்-ஆகாயம் ) பலர் முன்னிலையில் கலந்து விட்டார். 150 ஆண்டுகளுக்கு முன்பு இராமலிங்கசுவாமிகள் வடலூரில் ஒருதனி அறையில் ஒளிஉடலோடு மறைந்து விட்டார். பரமஹம்ஸ யோகனந்தரின் யோகா உடல் 33 நாட்கள் பொதுமக்கள்பார்வைக்கு வைக்கப்பட்டது.ஆன்மீகம் என்பதை ஒவ்வொருவரும் சுய அனுபவத்தால்தான் உணர முடியும்.

# SMART KHAKI'S smart move

## கோவையில் கடத்திச் சென்ற வெள்ளி கட்டிகள் பறிமுதல்; 2 பேர் கைது

கோவை மாவட்டம் கே.ஜி.சாவடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 19.08.2025 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்ட ஸ்மார்ட் காக்கீ'ஸ் (SMART KHAKI'S) என்னும் திட்டத்தின் கீழ் காவலர்கள் ரோந்து சென்றனர்.

அப்பொழுது வாளையார் செக்போஸ்ட் அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த பொழுது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்களை விசாரித்ததில், அவர்கள் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த நகுலன் மகன் அஜயன்(45) மற்றும் முகமத் நையுமதியின் மகன் முகமது வலியுதீன் என்றும் தெரியவந்தது.

மேலும், அவர்களிடம் விசாரணை நடத்தியதில், முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தனர். மேலும் அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்த பொழுது, அதில் உரிய ஆவணங்கள் இன்றி தலா 100 கிராம் எடை கொண்ட 25 வெள்ளி கட்டிகள் மற்றும் ரூ.1 லட்சத்து ஐம்பதாயிரம் ரொக்கம் வைத்திருந்தனர்.

மேற்படி நபர்களிடமிருந்து உரிய ஆவணம் இன்றி வெள்ளிக் கட்டிகளை எடுத்துச் சென்றதால் அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து கோவை மாவட்ட இணை ஆணையர் மாநில வரி, நுண்ணறிவுப் பிரிவு அவர்களிடம் விசாரணைக்காக ஒப்படைத்தனர்.



இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டாலோ, பொதுஅமைதிக்கு விளைவித்தாலோ, பொது சுகாதார பராமரிப்பிற்கு பாதகமாக செயல்பட்டாலோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் எச்சரித்துள்ளார்.

பொதுமக்கள் தங்களது பகுதிகளில் இதுபோன்ற குற்ற செயலில் ஈடுபடும் நபர்கள் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க 949 81 81 212 மற்றும் வாட்ஸ் அப் எண் 7708 100 100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்று பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளார்.





# விழிப்புணர்வு சுதந்திர தின விழா



திருநெல்வேலி மாவட்ட SP திரு.சிலம்பரசன் அவர்களின் உத்தரவுப் படியும், சேரன் மகாதேவி உட்கோட்ட காவல் DSP திரு.சத்தியராஜ் அவர்களின் ஆலோசனையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், சேரன்மகாதேவி காவல் நிலைய ஆய்வாளர் திரு.தர்மராஜ், உதவி காவல் ஆய்வாளர்கள் திரு.விஜயகுமார், திரு.அந்தோணி, உதவி ஆய்வாளர் திருமதி .அன்ன ஜோதி மற்றும் காவல் ஆளினர்கள் அனைவரும் சேர்ந்து, இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஊக்கப்படுத்தவும், குற்ற சம்பவங்களில் ஈடுபடாமல் தடுக்கவும் மற்றும் போதைப் பொருட்கள் உபயோகத்தின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

நிருபர் **R.ஜோதிபாசு,**
திருநெல்வேலி





# நாடு சொல்லும் சேதி கேட்டு

# நாகரிக கோமாளி ஆனோமுங்க..!



இறைச்சியை நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அது, சுகாதாரமில்லாத முறை என்றார்கள் மேலை நாட்டினர். இன்று அதையே BARBECUE (சுட்ட கோழி) என்றும் BC, KFC, MACDONALDS-ல் விக்கிறார்கள்.

உப்பு, ஆலமர, வேப்பங்குச்சி மற்றும் கரியை கொண்டு பல் தேய்த்தோம். இன்று உங்க டூத் பேஸ்ட்ல உப்பு இருக்கா, சால்ட் மற்றும் கரி இருக்கா என கேக்கிறார்கள்,

மண் பானை, மண் சட்டியில் சமைத்தோம், உலோகப் பாத்திரங்களை அறிமுகப்படுத்தினார்கள். இன்று மண்சட்டி உணவை பெரிய அதிசயம்போல கொள்ளை லாபத்தில் நட்சத்திர விடுதிகளில் விற்கிறார்கள்.

நாட்டு மாட்டின் பாலை பயன்படுத்தினோம். உடலுறவு கொள்ளாத விந்தனுவில் உருவாக்கிய ‘ஜெர்சி’ இன மாடுகளை அறிமுகப்படுத்தினார்கள். இன்று அவர்களே அந்த இன மாடுகள் அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆபத்து என இந்தியாவிலிருந்து நாட்டு மாடுகளின் விந்தனுவை இறக்குமதி செய்கிறார்கள்.

இளநீர், பதனீரைப் பருகினோம். எல்லா குளிர்பானங்களையும் எல்லா வடிவத்திலும் கொண்டு வந்தார்கள். இன்று அவர்களே இளநீரைத் தகர டப்பாவில் அடைத்து நம்மிடமே விற்கிறார்கள்.

கார்ப்பரேட் கம்பெனிகளின் வியாபார உத்தியான விளம்பரப் பேச்சை கேட்டுத் தொன்மைகளை தொலைத்த முட்டாள்களாகி விட்டோம். நாகரீகப் போர்வையில் நாமும் இதே தவறைத்தான் செய்கிறோம் என்பதே கசப்பான உண்மை.

வெற்றிலைக் கொடி படற அகத்தியை நட்டோம், அகத்திக் கீரை தின்ன ஆடு வளர்த்தோம், ஆடு போட்ட புலுக்கையை வரப்பில் அள்ளிப்போட்டு காடு வளர்த்தோம், காட்டுக்குள்ளே புழு, பூச்சியை உண்ண கோழியை விட்டோம், வளர்த்ததெல்லாம் விற்க மனசு இல்லாமல் அய்யனார் / நாகூர் ஆண்டவர் / மேரி மாதாக்கு என சிலவற்றை நேர்ந்து விட்டோம், நேர்ந்துவிட்ட அதுகளை ஊர் உண்ண திருவிழா வச்சோம்,

திருவிழாப் பேரைச் சொல்லி உறவை அழைத்தோம், உறவுகளோடு உட்கார்ந்து அவனுக்கு அவளெனப் பேசி முடிச்சோம். பேசி முடிச்சதுக்கு ஆதாரமா எங்க தோட்டத்து வெற்றிலையோடு பாக்கையும் வச்சோம். இப்படியே வஞ்சகம், சூதில்லாமல் சுழன்ற நமது வாழ்க்கை முறை, இப்போ நஞ்சும் சூதுமா நகருக்குள் நடக்கிறது.

நம் பாரம்பரியத்தை தொலைத்து மருத்துவமனைகளையும், மருந்து கடைகளையும் தேடி அலைகிறோம். நாமெல்லாம் நாகரிக கோமாளிகளாக மாறிவிட்டோம்.

உடல் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறலாம். ஆண்களுக்கு விந்தணுக்கள் விருத்தி அடையும். கண்பார்வை கூர்மைபெறும். மூளை சுறுசுறுப்படையும். நோயெதிர்ப்பு சக்தி பெறலாம். பயணத்தின் போது சோர்வடையாமல் இருக்கலாம். சுண்டு விரல் மோதிர விரல் நுனியில் கட்டை விரல் நுனியுடன் இணைத்து ஆள்காட்டி விரல், பாம்பு விரல் நீட்டியிருக்கும்படி இந்த பிராண முத்திரை செய்ய வேண்டும். தினமும் 10 நிமிடம் செய்ய வேண்டும். நல்ல பலன் தரும்.



## பிராண முத்திரை

(சம்மணமிட்டு இரு கைகளாலும் செய்க)

# கூத்தங்குழி கொலை வழக்கில் 5 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு ஆயுள் சிறை தண்டனை

**திருநெல்வேலி 4-வது கூடுதல் அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு**

**காவல் குழுவினரை பாராட்டிய SP திரு.N.சிலம்பரசன்**

2021 ஆம் ஆண்டு, கூத்தங்குழி கிராமத்தில் இருதரப்பினருக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக சிலுவை அன்றோ அபினஸ் என்பவர் கொலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கு திருநெல்வேலி 4-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தீர்ப்பு நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் நீதிபதி திரு.கதிரவன் அவர்கள் கடந்த 01.09.2025-அன்று தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 7 எதிரிகள் மற்றும் ஒரு இளவர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 7 எதிரிகள் மீதான விசாரணை திருநெல்வேலி 4-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணையின் முடிவில்,

1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, குற்றவாளிகள் சந்துரு (எ) சிலுவை அருள் சந்துரு(23), ரேவந்த் (26), பிரதீஷ் (எ)சஞ்சய் பிரதீஷ்(23)நிக்கோலஸ் (எ) நிக்கோலஸ் ராபிஸ்டன்(23), டென்னிஸ் (எ) சிலுவை மைக்கேல் டென்னிஸ்(24) ஆகியோருக்கு ஆயுள் தண்டனை, ரூ.5,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில், சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தந்த வள்ளியூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.வெங்கடேஷ், காவல் ஆய்வாளர் திரு.ரகுராஜன் மற்றும் கூடங்குளம் காவல் துறையினரையும், இவ்வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த, காவல் ஆய்வாளர் திரு.ஜான் பிரிட்டோ (தற்போது திருப்பத்தூர் மாவட்டம்), நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு வழக்குரைஞர் திரு.காளிமுத்து அவர்களையும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.



சந்துரு



ரேவந்த்



பிரதீஷ்



நிக்கோலஸ்



டென்னிஸ்

2025-ம் ஆண்டில் இதுவரை 16 கொலை வழக்குகளில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. இதில் ஒருவருக்கு மரண தண்டனையும், 59 நபர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 19 நபர்கள் சரித்திர பதிவேடு உடைய குற்றவாளிகள் என்பது குறிப் பிடத்தக்கது.

மேலும், இந்த ஆண்டில் மட்டும் சரித்திர பதிவேடு உடைய நபர்கள் 22 பேருக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது. அதில், கொலை வழக்கில் 19 நபர்களுக்கும், கொலை முயற்சி வழக்கில் 2 நபர்களுக்கும், போக்சோ வழக்கில் 1 நபருக்கும் தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சாட்சிகளை ஆஜர்ப்படுத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தரும் முனைப்பில் தொடர்ந்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

நிருபர்: **R.ஜோதிபாசு** திருநெல்வேலி

# மூத்த குடிமக்களுக்கு ரயில் பயண சலுகைகளை அறிவித்துள்ள மத்திய அரசு

- 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண் மூத்த குடிமக்களுக்கு விலக்கு.
- பெண் மூத்த குடிமக்கள் நிவாரண வயது 58 அல்லது அதற்கு மேல்  ஆண்களுக்கான ரயில் பயணிகள் கட்டணத்தில் 40% தள்ளுபடி.
- பெண்களுக்கு ரயில் கட்டணத்தில் 50% தள்ளுபடி.
- மெயில் / எக்ஸ்பிரஸ் / ராஜ்தானி / சதாப்தி / ஜன் சதாப்தி / துரோண்டோ போன்ற ரயில்வேயின் எந்த வகுப்பு பயணிகள் ரயில்களிலும் இந்த தள்ளுபடி கிடைக்கும்.
- ரயில்வே முன்பதிவு செய்யும்போது / அல்லது அனைத்து பொது டிக்கெட்டுகளையும் முன்பதிவு செய்யும்போது வயதுச் சான்று தேவையில்லை.
- இருப்பினும், ரயிலில் பயணம் செய்யும் போது ரயில் டிக்கெட் சரிபார்ப்பு (TC) க்கு வயது சான்றாக PAN அட்டை, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் அல்லது புகைப்படத்துடன் கூடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.
- மூத்த குடிமக்கள் தங்கள் ரயில் டிக்கெட்டுகளை எந்த டிக்கெட் / முன்பதிவு அலுவலகத்திலிருந்தும் அல்லது இணையம் மூலமாகவும் வாங்கலாம்.
- ரயில்வேயில் பயணிகள் முன்பதிவு முறையில் (PRS), மூத்த குடிமக்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 45 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு ஸ்லீப்பர் வகுப்பில் 6 பெர்த்களும், AC-3, AC-2 இல் 3 பெர்த்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.
- ராஜதானி/துரோண்டோவில் 4க்கும் மேற்பட்ட பெர்த்கள் முன்பதிவுக்காக ஒதுக்கப்படும்.
- மூத்த குடிமக்கள், நோய்வாய்ப்பட்ட பயணிகள், மாற்றுத்திறனாளி பயணிகளுக்கு இலவசமாக சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்.  மேலும், மூத்த குடிமக்களுக்கு வழிகாட்டி (அங்கீகரிக்கப்பட்ட போர்ட்டர்) தேவைப்பட்டால், அவர்கள் தனி கட்டணம் செலுத்த வேண்டும்.
- சில முக்கியமான ரயில் நிலையங்களில் நோயாளிகள், ஊனமுற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பயணிகளுக்கு பேட்டரி மூலம் இயக்கப்படும் நவீன சக்கர நாற்காலிகளை ரயில்வே நிர்வாகம் இலவசமாக வழங்கும்.
- மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நோய்வாய்ப்பட்ட ரயில் பயணிகளுக்கான சிறப்பு யாத்ரி மித்ரா சேவை / சேவைகள் பல முக்கிய ரயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- ஒரு ரயில் பயணிகள் ரயில் புறப்பட்ட பிறகு, மேற்கண்ட சலுகைகளுக்காக ஒதுக்கப்பட்ட கீழ் பெர்த்கள் காலியாக இருந்தால், மீதமுள்ள பெர்த்கள் மற்ற அனைத்து பொது பயணிகளுக்கும் வழங்கப்படலாம், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், காத்திருப்புப் பட்டியலில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்படும்.




திண்டுக்கல் மாவட்ட காவல் அலுவலகத்தில் கடந்த 02.09.2025 அன்று திண்டுக்கல் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப் பாளர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட 8 புதிய பொலிரோ வாகனங்களை SP Dr.அ.பிரதீப் IPS அவர்கள் பார்வையிட்டு வாகனங்களை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மற்றும் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைத்து கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

சிறப்பு நிருபர் **குரு.சரவணன்** திண்டுக்கல்





# மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் வென்ற இராணிப்பேட்டை ஊர்க்காவல் படையினர்

## பாராட்டிய SP திருமதி.அய்மன் ஜமால் IPS

தஞ்சாவூரில் கடந்த 22.08.2025 முதல் 24.08.2025 வரை நடைபெற்ற தமிழ்நாடு ஊர்க்காவல் படையினருக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் வேலூர் சரகம் சார்பாக 8 பேர் கலந்து கொண்டனர், மீட்புப் பணி பிரிவில் முதலிடம் பெற்று கோப்பையும் நினைவுப் பரிசுகளையும் பெற்ற இராணிப்பேட்டை மாவட்ட ஊர்க்காவல் படையினருக்கு, SP திருமதி.அய்மன் ஜமால் IPS அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

நிருபர்: **A.R.முருகேசன்,** இராணிப்பேட்டை

# கோவை மாவட்டத்தில் கஞ்சா குற்றவாளிகள் அதிரடி கைது

## போதைப் பொருட்களின் பயன்பாட்டை ஒழிக்க போராடும் SP Dr.K.கார்த்திகேயன் IPS

சமூகத்தின் நச்சாக விளங்கும் போதைப் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப்பொருள் இல்லாத கோவையை உருவாக்கும் பொருட்டு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

அதன் அடிப்படையில் கடந்த 29.08.2025 பெரியநாயக்கன்பாளையம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் துறையினருக்கு கஞ்சா விற்பனை விற்பனை சம்பந்தமாக கிடைத்த ரகசிய தகவல் கிடைத்தது. மலுமிச்சம்பட்டி பிரிவு அருகில் காவல் துறையினர் சோதனை மேற்கொண்டபோது, விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்த சாரதி பெஹ்ரா மகன் சந்திப் குமார் பெஹ்ரா(22) என்பவரை கைது செய்தனர். மேலும், அவரிடமிருந்து சுமார் 6 கிலோ 300 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதேபோல, பேரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலில், பொள்ளாச்சி ரயில் நிலையம் அருகே இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் சென்று சோதனை மேற்கொண்டபோது, மேற்கு





வங்காளத்தைச் சேர்ந்த லத்தீப் மொல்லா மகன் மதியார் ரஹ்மான் மொல்லா (26) கஞ்சா வைத்திருப்பது தெரிய வந்தது. அவரை கைது செய்த காவல் துறையினர் சுமார் 5 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். கோவை மாவட்டத்தில் 28.09.2025 அன்று மட்டும் 11.300 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நிருபர்: **P.நட்ராஜ்**,கோவை



# நீ மாடு மேய்க்க தான் லாயக்கு

முன்பெல்லாம் படிப்பு வராத மாணவர்களைப் பார்த்து ஆசிரியர்கள் அடிக்கடி சொல்லும் வாக்கியம், ‘‘உனக்குப் படிப்பெல்லாம் வராது.. நீ மாடு மேய்க்க தான் லாயக்கு’’ என்பதாகும்.

ஒரு மாணவனிடம் ஆசிரியர் வழக்கமான அந்த வாக்கியத்தைச் சொன்னார். துரதிஷ்டவசமாக, அந்த மாணவன் நிஜமாகவே அவ்வப்போது மாடு மேய்த்துக் கொண்டிருந்தான்.. படிப்பிலே வீக்.

‘மாடு மேய்க்கிறது ஈஸியா?’ என்று ஆசிரியரிடம் கேட்டான்

‘‘இல்லையா பின்னே? படிப்பறிவு இல்லாதவன் தானே மாடு மேய்க்கிறான்?’’ என்றார் ஆசிரியர்.

‘‘அம்பது மாடுல எது கன்னியப்பச் செட்டியார் மாடு, எது பாண்டிய நாடார் மாடுன்னு உங்களாலே கண்டுபிடிக்க முடியுமா?’’

ஆசிரியர் அதிர்ந்தார்...

‘‘எல்லா மாடும் ஒரே இடத்துலதான் மேயுமா?’’

அடுத்த கேள்வி இன்னும் அதிகமாகத் தாக்கியது.



‘‘எது எங்கே மேயும்ன்னு பாத்து ஓட்டிக்கிட்டு வருவீங்களா?’’

இப்போது ஆசிரியர் பாண்டியராஜன் போல விழித்தார்.

‘‘மாடு எப்ப சாணி போடும்ன்னு தெரியுமா?’’

இப்போது விழி ஆடு திருடின கள்ளன்போல் ஆயிற்று.

‘‘சாணி மொத்தத்தையும் கூடைல பிடிப்பீங்களா? வரட்டி தட்டத் தெரியுமா? வரட்டியில ஏன் வைக்கோல் போடணும்ன்னு தெரியுமா? அது ராடு வச்ச கான்க்ரீட்போல ஸ்ட்ராங்குன்னு தெரியுமா?’

கேள்விகள் சரமாரி ஆயின.

‘‘எனக்கு மாடு மேய்க்க வரல்லைன்னுதான் எங்கப்பா படிக்க அனுப்பிச்சார் தெரியுமா?

‘நீ மாடு மேய்க்க லாயக்கில்லை, பேசாம படிச்சி வாத்யார் ஆயிடு’ன்னு அனுப்புச்சாரு’’..

அதற்கப்புறம், அந்த வாத்தியார் யாரையுமே நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்று சொன்னதே இல்லை!



# குல தெய்வ வழிபாட்டின் ரகசியங்கள்



நம்முடைய அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். பலவிதமான தெய்வீக கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் கொண்டது நம் பாரத தேசம். நம் பாரத தேசம் ஆன்மீகத்தின் தாய் நாடாக விளங்குகின்றது.

அன்றிலிருந்து இன்றுவரை தெய்வீகத்தோடு இணைத்தே தங்கள் வாழ்க்கையை பாரத தேசத்து மக்கள் வாழ்கின்றனர். அனைத்து விதமான பிரச்சினைகளில் இருந்தும் தெய்வங்கள் மக்களை காத்து வருகின்றது. சகல கொடிய நோய்களில் இருந்தும் பேய்களில் இருந்தும் மக்களை தெய்வங்கள் காத்து வருகின்றது. அப்படி மக்களின் வழிபாட்டு முறைகளில் தெய்வீக வழிபாடு முழுமையாக போற்றப்படுகின்றது.

### குலம் காக்கும் குல தெய்வ வழிபாடு

குலத்தை காக்கும் குல தெய்வ வழிவாடு என்பார்கள். குல தெய்வ வழிபாடு அழிந்தால் குலம் அழியும் என்பது முன்னோர்கள் வாக்கு. குல தெய்வ வழிபாடே குலத்தை காக்கும் வழிபாடாகும்.

அனைத்து குடிகளுக்கும் குல தெய்வ வழிபாடு உள்ளது. அனைத்து மக்களுக்கும் குல தெய்வங்கள் இருக்கும். இது நமது தேசத்தின் மக்கள் பாரம்பரியமாக கடைபிடித்து வரும் வழிபாடாகும். தென்னிந்தியாவில் குல தெய்வ வழிபாடு அதிகம் உள்ளது.

### குல தெய்வங்கள் எப்படி பின்பற்றப்படுகிறது

நம்முடைய முன்னோர்களால் வழிவழியாக வழிபடக் கூடிய முறையாகும். தாத்தா, பூட்டன், முப்பாட்டன் என்று பரம்பரையாக வழிபடக் கூடிய முறையாகும். பெருந் தெய்வங்களே குறுகி குல தெய்வங்களாக மாறுகின்றது. அனைத்து குல தெய்வங்களும் பெருந்தெய்வங்களே ஆகும். தங்கள் குலத்தில் ஒரு நீதியான கன்னியோ அல்லது ஆணோ இறந்தால் அவர்கள் ஆன்மா பெருந் தெய்வங்களோடு சேர்ந்து நமக்கு குல தெய்வங்களாக மாறி அந்தக் குலத்தை காக்கின்றனர்.

### பெருந்தெய்வம் வேறு சிறு தெய்வம் வேறு இல்லை

பெருந்தெய்வம் வேறு சிறு தெய்வங்கள் என்று சொல்லப்படும் குலதெய்வங்கள் வேறு இல்லை. இரண்டும் ஒன்றே. பெருந் தெய்வங்களைஒவ்வொரு குலத்தையும் காக்கும் தெய்வமாக மனிதர்களுக்காக குறுகி வருவதால் குல தெய்வம் என்று சொல்கின்றோம். நாம் உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்.

| பெருந்தெய்வ பெயர் | கிராமத்து பெயர் |
| --- | --- |
| பிரம்மன் (நான்முகன்) | மண்ணாண்டி |
| விஷ்ணு (மாயோன்) | மாயாண்டி |
| சிவன் | சடையாண்டி |
| இலட்சுமி | அலர்மேலு (அலமேலு) |
| சரஸ்வதி | பேச்சியம்மன் |
| காளி | காளி, மாரி, கண்ணாத்தாள் |
| நந்தி | மாடன் |

ஓம் காளி ஓம் நமசிவாய



கருடசித்தர்
**Dr.பாலகிருஷ்ண சுவாமி**
எரசை, தேனி மாவட்டம்.

என்று பெருந் தெய்வமே கிராமங்களில் குல தெய்வமாக மாறி இருப்பதை உணரலாம்.

ஒவ்வொரு குடிகளின் குல தெய்வங்களும், சிவன், பிரம்மா, விஷ்ணு, முருகன், கணேசன், சூரியன், இலட்சுமி, சரஸ்வதி, காளி இவைகளோடு தொடர்புடையதாகவே இருக்கும்.

அதனால் நாம் குல தெய்வங்களை முழுமையாக வழிபட்டாலே அது பெருந்தெய்வங்களிடம் போய் சேருகின்றது. பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதின் விளக்கத்தை பார்ப்போம்.

**பரம்பரை விளக்கம்**

முதல் தலைமுறை: முதல் தலை முறை நாம்
இரண்டாம் தலைமுறை: தாய், தந்தை
மூன்றாம் தலைமுறை: பாட்டன், பாட்டி
நான்காம் தலைமுறை : பூட்டன், பூட்டி
ஐந்தாம் தலைமுறை: ஓட்டன், ஓட்டி
ஆறாம் தலைமுறை: சேயோன், சேய்
ஏழாம் தலைமுறை: பரண், பரை

பரன்+பரை= பரம்பரை இதுவே நாம் பரம்பரை பரம்பரையாக குல தெய்வ வழிபாட்டை கடைபிடித்து வருகின்றோம் என்பதாகும்.

ஒரு தலைமுறை 60 வருடங்கள், ஏழு தலைமுறைகள் 480 வருடங்கள். ஈரேழு தலைமுறைகள் என்பது 960 வருடங்கள் ஆகும். பரம்பரை பரம்பரையாக என்று சொல்வது 14 தலைமுறைகளை குறிக்கும்.

நம் பாரத தேசத்தின் வழிபாடே ஆதிப் பரம்பரை பரம்பரையாக இன்றும் தொடர்ந்து வருகின்றது.

குல தெய்வத்தின் மூலம் வெளிதூரத்தில் உள்ள பரம்பரைகளை அடையாளம் கண்டு கொள்வார்கள். குல தெய்வ வழிபாடு ஆதி வழியாக இருந்து வருகின்றது

**குல தெய்வ வழிபாட்டின் நன்மைகள்**

குல தெய்வ வழிபாட்டால் குடும்பத்தில் வரக்கூடிய பிரச்சினைகள் நீங்கும். கொடிய நோய்களில் இருந்தும் தீய மாந்திரீக சக்திகள் நம்மை அணுகாது. குல தெய்வத்தை முழுமையாக வழிபட்டால் அனைத்து பிரச்சினைகளும் குடும்பத்தை விட்டு நீங்கும்.

ஒவ்வொரு குலத்தில் பிறந்த முதல் குழந்தைக்கு ஒவ்வொருத்தருடை குல தெய்வங்களின் பெயர்களை சூட்டுவார்கள்.

பல விதமான தத்துக்களும், தோஷங்களும், கர்மங்களும், செய்வினை ஏவல் தோஷங்களும் நம் குடும்பத்தை விட்டு அகலும். குல தெய்வ வழிபாட்டால் முன்னோர்களின், ஆன்மா சாந்தியடையும் முன்னோர்களின் ஆசீர்வாதமும் பித்ருக்களின் ஆசிர்வாதமும் நமக்கும் கிடைக்கும். நமக்கு வரக்கூடிய உயிர் ஆபத்தை வரவிடாமல் தடுக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**குல தெய்வ வழிபாட்டை மறந்ததால் வரும் தீமைகள்**

குல தெய்வ வழிபாடு செய்யாமல் தெய்வ நம்பிக்கை இல்லாமல் இருந்தால் குல தெய்வ தோஷம் விளையும். அவர்களுடைய தலைமுறைகள் அழியும். முன்னோர்களின் ஆசீர்வாதமும், பித்ருக்களின் ஆசீர்வாதமும் நமக்கு கிடைக்காது. அந்த வீட்டில் பல்லி என்ற கெவுளி சொல்லாது. குடும்பத்தில் அமைதி இருக்காது. அனைத்து காரியங்களும் தடைகளாகும். குடும்பத்தில் தீய சக்திகள் உள்ளே புகுந்து அனைவரின் மனதையும் குழப்பி அழிக்கும். குல தெய்வ வழிபாடை மறந்தவருக்கு மேற்சொன்ன நன்மைகள் நடக்காது.

குல தெய்வ வழிபாட்டை மறந்தவர்களின் குலம் அழியும். குல தெய்வம் இன்னது என்று தெரிந்தும் வழிபாட்டை மறந்தவருக்கு மரணத்திற்குப் பின் ஆன்ம தோஷம் பிடிக்கும். அதனால் ஒவ்வொரு குடிகளும் குல தெய்வத்தை அந்தந்த காலத்தில் வழிபட்டு அதன் அருளைப் பெற வேண்டும்.

**குல தெய்வம் தெரியாதவர்கள்..**

ஒரு சிலருக்கு குல தெய்வங்கள் இன்னதென்று தெரியாமல் இருக்கும் அவர்களுக்கும் குல தெய்வங்கள் இருக்கும். ஆனால், தாத்தன், பூட்டன் மூலமாக அவர்கள் தலைமுறைகளுக்கு சொல்லாமலேயே இறந்து விடுவார்கள்.

இரண்டு, மூன்று தலைமுறை கழித்து வரும் சந்ததியினருக்கு குல தெய்வம் இன்னதென்று தெரியாமல் இருக்கும். அவர்கள் முறையான முறையில் தெய்வீக வழியில் குல தெய்வத்தை தெரிந்து கொள்ளலாம். கண்டுபிடிக்க முடியாதவர்கள் நம் சித்தர்கள் சொன்ன 5 தெய்வங்களில் ஒன்றை தேர்ந்தெடுத்து நாம் பூசை செய்து கொண்டாலே அந்த பூசை குல தெய்வத்திடம் போய் சேர்ந்து நமக்கு குல தெய்வ ஆசிர்வாதம் கிடைக்கும்.

**அந்த தெய்வங்கள் பின்வருமாறு:**

1. அய்யனார், 2. கருப்பசாமி, 3.முனீஸ்வரன் (அ) முனியப்பன், 4. காளியம்மன், 5. பேச்சியம்மன்

இந்த 5 தெய்வங்களில் ஒன்றை நாம் பூசை செய்து கொள்ளலாம். அப்படி செய்யும்போது நம் குல தெய்வத்தின் அருள் கிடைக்கும்.

சிலருக்கு குல தெய்வம் எது என்று தெரியாமல் இருந்தாலும் குல தெய்வத்துக்கு அவர்களை தெரிந்து விடும். அவர்கள் கனவில் சென்று நான்தான் குலதெய்வம் என்று காட்டிக் கொடுப்பதும் உண்டு.

குல தெய்வமே குலங்களின் வாரிசுகளின் கனவுகளில் சென்று அவர்களுக்கு இன்ன குல தெய்வம் என்று காட்டிக் கொடுக்கும். ஒரு சிலருக்கு ஏதோ ஒரு சக்தி தன் அருகில் இருப்பதுபோல தெரியும். ஆனால் இது இன்ன தெய்வம் என்று உணராமல் இருப்பார்கள்.

ஆனால், அவர்கள் முழு மனதுடன் வேண்டும் போது, அது குல தெய்வம் என்று காட்டிக் கொடுக்கும். குல தெய்வங்கள் நாம் எங்கு சென்றாலும் அதற்குரிய விதிப் பயன் உள்ளவரிடம் கூட வரும். அவர்களுடன் இருந்து அவர்களுக்கு இன்னதென்று தெரியாமல் அவர்களுக்கு சென்ற இடங்களில் உதவி செய்து வெற்றியை கொடுக்கும்.

### குல தெய்வத்தை வழிபடும் நாட்கள்:

மாசி மகா சிவராத்திரி குல தெய்வங்களை அன்றாடம் தினமும் நாம் நினைத்து கொள்ளலாம். குல தெய்வம் அருகில் இருப்பவர்கள் வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு முறையோ சென்று வழிபாடு செய்யலாம்.

ஆனால், முக்கியமாக மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி அன்று ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வங்களுக்குச் சென்று வழிபடுவது பல தலைமுறைகளுக்கும் நன்மைகளை தரும்.

மாசி மாதத்தில் வரக்கூடிய மகா சிவராத்திரிக்கு குல தெய்வங்கள் எவ்வளவு தூரம் எங்கு இருந்தாலும் வருடத்துக்கு ஒரு முறையாவது வழிபடுவது மிகப்பெரிய நன்மையையும் குல தெய்வ அசீர்வாத்ததையும் கொடுக்கும்.

சிறு வேலையில் இருப்பவராக இருந்தாலும் பெரிய வேலை அல்லது பதவியில் இருப்பவராக இருந்தாலும் மாசி மகா சிவராத்திரி அன்று குல தெய்வத்தை முழு மனதுடன் வழிபடுவது ஆன்ம மோட்சத்தை தரும். அந்த நாளில் தெய்வங்கள் நன்மைகளை கற்பித்து நம் குடும்பத்துக்கு அருள் இறங்கி நல் வழிகாட்டும்.

### குல தெய்வங்களின் பெயர்கள்:

காளி, கருப்பசாமி, அய்யனார், மாடசாமி, ஆதி சிவன், மாயாண்டி, மண்ணாண்டி, சடையாண்டி, சென்றாயப்பெருமாள், இசக்கியம்மன், ஜக்கம்மாள், தொட்டம்மாற், பட்டாளம்மன், எல்லம்மாள், பேரம்மாள், அலமேலு, மாரியம்மன், பேச்சியம்மன், சோனை முத்து, அங்காள ஈஸ்வரி, வராகி, சப்த கன்னிகள், மந்தையம்மன், முனீஸ்வரன், இருளாண்டி, தொட்டிச்சி, சீலக்காரி, சப்பாணி கருப்பு, சாஸ்தா, ஒண்டி வீரன், சின்ன பொம்மு, பெரிய பொம்மு, பொம்மக்காள், நாகம்மாள், அக்னி மாண்டவன், இடும்பன், மாசாணி அம்மன், மொட்டை முனி, மதுரை வீரன், பாண்டி, பைரவன், அழகு மலையான், சோலைமலை.

இதுபோல் பல லட்சக்கணக்கான குல தெய்வங்கள் நம் தேசத்தில் இருந்து மக்களை காத்து அருள்புரிகின்றதுத. நம் பாரம்பரியமும் பண்பாடும் கலாச்சாரமும் மாறாமல் ஒவ்வொருவரும் குல தெய்வ வழிபாட்டைக் கடைப்பிடித்து நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.

பல இலட்சக்கணக்கான குல தெய்வங்களும் ஒன்றையொன்று தொடர்புடையதாக இருக்கின்றது. ஒவ்வொரு குல தெய்வத்திற்குரிய பூசை செய்யும் வழிபாட்டு முறைகளை நாம் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு குல தெய்வ கோவில்களிலும் ஸ்தல விருட்சம் இருக்கும்.

### குல தெய்வங்கள் இருக்கும் இடங்கள்

குல தெய்வங்கள் கோவிலாகவும் கட்டப்பட்டு வழிபாடு செய்துள்ளனர். ஆதி காலத்தில் மூங்கில் புதர், நாணல் புதர், ஆல மரம், அரச மரம், அத்தி மரம், வில்வ மரம், வேப்ப மரம், வாகை மரம், ஜாலி மரம், மலைக் குகைகள், கள்ளிச்சி மரம், விடத்தலை மரம், இன்னும் பல வகையான மறைவிடமான இடங்களில் ஒவ்வொருத்தருடைய குல தெய்வங்கள் இருந்து ஒவ்வொரு குடிகளும் புனிதமாக வழிபட்டனர்.

அவைகள் தற்போது கோவிலாகவும் மாறி வழிபாடு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு தெய்வங்களுக்கும் அதற்குரிய பூசைப் பொருட்களோடு நாம் முழு மனதுடன் பூசை செய்யும்போது, அனைவரின் குல தெய்வங்களும் மனம் மகிழ்ந்து முழு ஆசீர்வாத்தை கொடுக்கும். இந்த வழிபாடு செய்யும்போது பிரபஞ்ச இயற்கை ஜீவ சங்கிலி தொடர்ந்து இயங்கி மனித குலத்தை காக்கும்.

நம் முன்னோர்களின் வழியில் நாம் நம் தெய்வ வழிபாட்டை கடைபிட்தது நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.

### பிரம்மன் மந்திரம்:

*மறுவற உணர்ந்தனை மலமறு திகிரிடை*
*பொறிவரம்பாகி புண்ணிய முதல்வனே*
*பொறிவரம்பாகிய புண்ணிய முதல்வன் நின்*
*நறைவிரி மறைமலர் நகுமடி தொழுதும்*
*விஷ்ணு மந்திரம்*
*ஆதி தனிக்கோலம் ஆனான் அடியவற்காகச்*
*சோதித் திருத்தூணில் தோன்றினான்*
*வேத்ததின் முன்னின்றான்-வேழம்*
*முதலே என அழைப்ப என் என்றான் எங்கட் கிறை*

**சிவன் மந்திரம்**

*செக்க நெடுவானில் திங்கள் நிலாத்துளும்பி*
*உக்கதெனச் சடைமேல் உம்பர்நீர்*
*மிகக் கொழுமும் வெள்ளத்தான் வெள்ளி*
*நெடுங்குரியன் மெய்யன்பர் உள்ளத் தான்*
*எங்கட்குளன்*




# உயிரை காக்க

நெஞ்சுவலி ( மாரடைப்பு ) நேரத்தில் உங்கள் உயிரை நொடியில் காப்பாற்றிக் கொள்ள வழிமுறை:

தனியாக இருக்கும்போது நெஞ்சுவலி (மாரடைப்பு )வந்தால் உங்களை நீங்களே எப்படி காப்பாற்றிக்கொள்வது?

மாலை மணி 6:30,வழக்கம் போல் அலுவலகப் பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு தனியாக சென்று கொண்டிருக்கிறீர்கள். அலுவலகத்தில் வேலை பளுவின் காரணமாக, மற்றும் இதர சில பிரச்சினைகள் காரணமாக உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் உள்ளது, நீங்கள் மிகவும் படபடப்பாகவும்,
தொய்வாகவும் உள்ளீர்கள்.

திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள். அந்த வலியானது மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுவதை உணருகிறீர்கள்,

உங்கள் வீட்டில் இருந்து மருத்துவமனை ஒரு 5 மைல் தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆனால், உங்களால் அந்த 5 மைல் தூரத்தை கடக்க முடியாது என உங்கள் மூளை உங்களுக்கு சொல்கிறது இந்த நேரத்தில் நம் உயிரை நாமே காக்க என்ன செய்யலாம்?

துரதிஷ்ட வசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவராக உள்ளனர். உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது.. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளது.

இப்போது நீங்கள் செய்ய வேண்டியது, தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும வேண்டும்.
ஒவ்வொரு முறை இருமுவதற்கு முன்னரும் மூச்சை மூச்சை இழுத்து விட வேண்டும்.

இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும். இதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு 2 நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக்கொண்டே
இருக்க வேண்டும்.

மூச்சை இழுத்து விடுவதினால் நுரையீரலுக்கு ஆச்சிஜன் சீராக செல்ல வழி வகுக்கிறது இருமுவதால் இதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக்கொண்டே இருக்க உதவும்,

இதனால் ரத்தஓட்டம் சீரடையும். இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும். பின்னர் இதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்.

உயிரை காக்கும் இது போன்ற விசயங்களை தெரிந்து வைத்துகொள்ளுங்கள்.

# செப்டம்பர் மாத கிரக மாற்றங்கள்

***ஜோ**திட சாஸ்திரத்தின் படி அனைத்து கிரகங்களும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தங்கள் ராசிகளை மாற்றுகின்றன. இவை கிரக பெயர்ச்சிகள் என்று அழைக்கப்படுகின்றன.*

*கிரக பெயர்ச்சிகளின் தாக்கம் அனைத்து ராசிகளிலும் காணப்படுகின்றது. சில ராசிகளில் இவை நல்ல பலன்களையும் சில ராசிகளில் பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றன.*

*செப்டம்பர் மாதத்தில், சூரியனுடன் சேர்ந்து, புதன், சுக்கிரன் மற்றும் செவ்வாய் ஆகிய கிரகங்களும் தங்கள் ராசிகளை மாற்றுகின்றன. ஜோதிட ரீதியாகவும் இது முக்கிய ஒரு மாதமாக உள்ளது.*

*செப்டம்பர் மாத கிரக மாற்றங்களின் தாக்கம் அனைத்து ராசிகளிலும் காணப்படும். எனினும், சில ராசிகளில் இதனால் அதிகப்படியான நன்மைகள் கிடைக்கும். இவர்களுக்கு இந்த மாதம் பொற்காலமாக் ஜொலிக்கும். அந்த அதிர்ஷ்ட ராசிகளை பற்றி இந்த பதிவில் காணலாம்.*



**மிதுனம்:** செப்டம்பர் மாதம் மிதுன ராசிக்காரர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் மிகவும் இனிமையான பலன்கள் கிடைக்கும். வாழ்க்கையில் நடக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். குடும்பத்தின் முழுமையான ஆதரவு கிடைக்கும். பணம் தொடர்பான விஷயங்களிலும் எதிர்பாராத பலன்களைப் பெறுவீர்கள். இந்த நேரத்தில், வேலை தொடர்பாக மேற்கொள்ளும் பயணங்கள் வெற்றிகரமாக இருக்கும்.

**துலாம்:** செப்டம்பர் மாதம் உங்கள் வாழ்க்கையில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த நேரத்தில், நீங்கள் எந்த வேலை செய்தாலும், அதிர்ஷ்டத்தின் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் வேலை முறையால் மக்களை ஆச்சரியப்படுத்தலாம். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும், அல்லது வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்களுடன் நல்ல நேரத்தை செலவிடுவீர்கள். இந்த நேரத்தில் வருமானமும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** இந்த மாதம் விருச்சிக ராசிக்காரர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவார்கள். இந்த மாதம் முழுவதும் உற்சாகத்துடன் இருப்பீர்கள். இந்த ராசிக்காரர்கள் சிலர் சொந்தமாக தொழில் தொடங்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் இருக்கும். கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. புதிய வேலைக்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

**தனுசு:** தனுசு ராசிக்காரர்களுக்கு செப்டம்பர் மாதம் சாதகமான சூழல் உருவாகும். கடந்த காலத்தில் செய்த கடின உழைப்பு பலனளிக்கும். பணியிடத்திலும் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். மூத்த அதிகாரிகள் உங்கள் வேலையைப் பாராட்டலாம். இந்த ராசிக்காரர்கள் சரியான இடத்தில் பணத்தை முதலீடு செய்வதன் மூலமும் லாபம் ஈட்டலாம். உங்கள் ஆற்றல் நிலை மிக அதிகமாக இருக்கும். இதன் காரணமாக சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும்.

**மீனம்:** மீன ராசிக்காரர்களுக்கு செப்டம்பர் மாதம் தொழில் ரீதியாக ஒரு கலவையான நேரமாக இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் முழுமையான ஆதரவு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். தொழிலதிபர்கள் விரும்பிய பலன்களைப் பெற வாய்ப்புள்ளது. குடும்ப வாழ்க்கையாக இருந்தாலும் சரி, தொழிலாக இருந்தாலும் சரி, இரண்டிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.




**மேஷ இராசிஅன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு உண்டாகும். கருத்து வேறுபாடுகள் மறையும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நடப்பது குடும்பத்திற்கு நல்லது. சுப நிகழ்ச்சிகள் கைகூடி வருவதால் உறவினர்களும் நண்பர்களும் குழுமி வீட்டில் சந்தோஷம் உண்டாகும். வெளியூர் சுற்றுலா செல்வதற்கான வாய்ப்புகள் சிலருக்கு ஏற்படும். மேல்படிப்புக்காக பிள்ளைகள் வெளிநாடு செல்ல வேண்டிய நிலை உண்டாகும்.

அலுவலகத்தில் பொறுப்பும் வேலையில் சிறப்பும் கிடைக்கும். இருப்பினும் வேலையில் கவனமாக ஈடுபட வேண்டும். சிலருக்கு இடமாற்றம் உண்டாகும். பதவி உயர்வுக்கான வாய்ப்பு ஏற்படும். அரசு பணியில் இருப்பவர்கள் மாத மத்திய பகுதியில் மிக எச்சரிக்கையாக வேலை செய்ய வேண்டும். மறைமுக எதிர்ப்புகள் மறைந்து போகும். தொழிலில் மூலதனத்தை அதிகரிப்பீர்கள். கணக்கு வழக்குகளில் மிக கவனமாக கையாள வேண்டும். மாதக் கடைசியில் கையிருப்பு அதிகரிக்கும். குடும்பத்தை கட்டியாளும் பெண்களுக்கு இந்த மாதம் ஒரு அற்புதமான மாதமாகும். நகைகள் வாங்குவீர்கள். புதிய ஆடைகள் அலங்காரங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மதிப்பும் மரியாதையும் கூடும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். ஊதிய உயர்வு ஏற்பட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்:** முருகன்
**ஸ்லோகம்:** கந்தசஷ்டிக் கவசம் பாராயணம்
**பரிகாரம்:** முருகனுக்கு செவ்வரளி மாலை சாற்றுவது
**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 10-ம் தேதி 26/09/25 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் புரட்டாசி 12-ம் தேதி 28/09/25 ஞாயிற்றுக்கிழமை இரவு 2.24 மணி வரை.




**ரிஷப இராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் சிறப்பான காரியங்கள் நடக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். அதே நேரத்தில் ஒருவர் பேச்சை ஒருவர் தட்டாமல் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் நடவடிக்கையை அணுக்கமாக கண்காணிக்க வேண்டும். திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பு அதிகரிக்கும். வியாபாரம் வெற்றிகரமாக நடக்கும். கையில் தாராளமாக காசு புழங்கும். தேவையில்லாத செலவுகள் வந்தும் சிரமப்படுத்தும். பண வரவு செலவுகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தொழில் காரணமாக வெளியூருக்கு செல்ல வேண்டிய நிலை உண்டாகும். வேலை நிமித்தமாக சில நாட்கள் குடும்பத்தை பிரிந்து செல்ல வேண்டிய நிலையும் ஏற்படும். பிள்ளைகளின் நடவடிக்கையை சற்று கவனமாக பார்க்க வேண்டும். இடமாற்றம், வேலை உயர்வு போன்ற காரியங்களை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு மாத இறுதியில் நல்ல செய்தி கிடைக்கும். தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மறையும். போட்டியாளர்களின் இடையூறுகளை தாண்டி அவர்கள் பொறாமைப்படும் அளவிற்கு வளர்ச்சி பெறுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குடும்பப் பெண்களுக்கு ஆனந்தத்தை அளிக்கின்ற மாதமாக ஆவணி அமையும். நீண்ட காலமாக நினைத்து இருந்த ஆசை நிறைவேறும். வேலை பார்க்கும் பெண்களுக்கு இந்த மாத இறுதிப் பகுதியில் ஒரு நல்ல செய்தி கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** விநாயகர்
**ஸ்லோகம்:** விநாயகர் அஷ்டோத்திரம்
**பரிகாரம்:** விநாயகருக்கு நெய் தீபம் ஏற்றுவது
**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 12-ம் தேதி 28/09/25 ஞாயிற்றுக்கிழமை இரவு 2.25 மணி முதல் புரட்டாசி 15-ம் தேதி 01/10/25 புதன்கிழமை பகல் 12.06 மணி வரை.




**மிதுன ராசி அன்பர்களே!**

மாதத்தின் முற்பகுதியில் சில முக்கியமான பணிகளை முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். உங்கள் பக்கம் நியாயம் இருந்தாலும் அதை மென்மையாக மனைவியிடத்தில் எடுத்துக் கூற வேண்டும். அழுத்தம் கொடுத்தால் வீட்டிலிருந்த அமைதி கெட்டுப்போகும். எந்த காரியமாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் பேசி தீர்த்துக் கொள்வது நல்லது. இருப்பினும் மாத மத்திய பகுதியில் அனைத்து பிரச்சனைகளும் கடந்து போகும். வியாபாரத்தில் திடீர் திருப்பங்கள் உண்டாகும். புதிய முதலீடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உறவினர்களால் சில தொந்தரவுகள் உண்டாகும். வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புகளும் ஏற்படும். குடும்பத்துடன் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகள், பெற்றோரின் மனம் அறிந்து நடந்து கொள்வார்கள். கல்வியில் கவனத்தை செலுத்துவார்கள். வேலை செய்யும் இடத்தில் சிலருக்கு மறைமுக எதிர்ப்புகள் ஏற்படலாம். மாத பிற்பகுதியில் அனைத்து சங்கடங்களும் விலகும். தொழில்நுட்பத்தோடு வியாபாரத்தை பெருக்குவீர்கள். திட்டம் போட்டு செய்வதால் பாதிப்புகள் குறைவாக இருக்கும். ஆன்லைன் சூதாட்டங்களை அறவே ஒதுக்க வேண்டும். இல்லத்தரசிகளின் ஆசைகள் நிறைவேறும். எதிர்பாராமல் சில ஆதாயம் உண்டாகும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். வேலை பார்க்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும் அலுவலகத்தில் ஒத்துழைப்பு கூடும்..

**வணங்க வேண்டிய தெய்வம்:** மாரியம்மன்
**ஸ்லோகம்:** துர்கா அஷ்டோத்திரம்
**பரிகாரம்:** மாரியம்மனுக்கு இராகு காலத்தில் விளக்கேற்றுவது
**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 15-ம் தேதி 01/10/25 புதன்கிழமை பகல் 12.07 மணி புரட்டாசி 17-ம் தேதி 03/10/25 வெள்ளிக்கிழமை இரவு 7.24 மணி வரை




**கடக இராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் சின்ன சின்ன பிரச்சனைகளை சந்திப்பீர்கள். குடும்பத்தில் சில சிரமங்கள் இருந்தாலும் கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். அதே நேரத்தில் விட்டுக் கொடுத்துப் போவது மிகவும் முக்கியமாகும். பணம் காசு கையில் இருந்தாலும் குடும்ப மகிழ்ச்சி மிகவும் முக்கியமென்பதை கணவன் மனைவி இருவரும் புரிந்து கொள்ள வேண்டும். திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களில் அலைச்சல் ஏற்பட்டாலும் அதனால் ஆதாயம் உண்டாகும். கோயில் திருவிழாக்களில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகள், பெற்றோரின் மனமறிந்து நடந்து கொள்வார்கள். மாத நடுப்பகுதியில் அலுவலக வேலையில் அலைச்சல் அதிகரிக்கும். சோம்பல் இல்லாமல் வேலை பார்ப்பது நல்லது. தொழிலில் எதிர்பாராத நன்மை உண்டாகும். வியாபாரத்தின் வெற்றி பணப்புழக்கத்தை அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புகளை தாண்டி வருவீர்கள். அதனால் பெரிய பாதிப்பு ஏற்படாது. கடை கணக்கு வழக்குகளில் கவனம் தேவை. சிறுவாட்டு பணம் சேகரிப்பார்கள். தங்கள் தேவையை பூர்த்தி செய்யும் வாய்ப்பை பெறுவார்கள். அலுவலகத்தில் பெண்களுக்கு நன்மைகள் உண்டாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** அர்த்த நாரிஸ்வரர்
**ஸ்லோகம்:** சிவ அஷ்டோத்திரம்
**பரிகாரம்:** சிவபெருமானுக்கு நெய்தீபம் ஏற்றுவது
**சந்திராஷ்டமம்:** ஆவணி 21-ம் தேதி 06/09/25 சனிக்கிழமை பகல் 11.46 மணி முதல் ஆவணி 23-ம் தேதி 08/09/25 திங்கள்கிழமை மாலை 4.31 மணி வரை

**சிம்மம் ராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் எதிர்பார்த்த காரியம் நடக்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. மனைவி சொல்வதை காது கொடுத்து கேட்க வேண்டும். அன்போடும் அனுசரணையோடும் நடந்து கொண்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவம் ஆடும். இருப்பினும் பிள்ளைகளாலும் சந்தோசம் கிடைக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களையும் வாங்கிப் போடுவீர்கள். தக்க நேரத்தில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் படிப்பு செலவுக்காக வங்கிக் கடனை எதிர்பார்ப்பீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களின் மனதை புரிந்து நடந்து கொள்ள வேண்டும். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். அரசு பணியில் இருப்பவர்கள் உரிய நேரத்தில் வேலைக்குச் செல்ல வேண்டும். தங்கள் பணியை மிக எச்சரிக்கையாக செய்ய வேண்டும். வியாபாரம் தொழில் விஷயங்களில் நிதானமாக முடிவு எடுக்க வேண்டும். பெண்களின் கெட்டிக்காரத்தனத்தால் உங்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்கள் குறைந்து போகும். அவர்களும் மகிழ்ச்சியாக இருந்து உங்களையும் மகிழ்ச்சிப்படுத்துவார்கள் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** லெஷ்மி நரசிம்மர்

**ஸ்லோகம்:** லெஷ்மி நரசிம்மர் அஷ்டோத்திரம்

**பரிகாரம்:** யோக நரசிம்மருக்கு நெய்தீபம் ஏற்றுவது

**சந்திராஷ்டமம்:** ஆவணி 23-ம் தேதி 08/09/25 திங்கள்கிழமை மாலை 4.32 மணி முதல் ஆவணி 25-ம் தேதி 10/09/25 புதன்கிழமை இரவு 7.41 மணி வரை.

---

**கன்னி ராசி அன்பர்களே!**

மாத ஆரம்பத்தில் சில பிரச்சனைகளை சந்திப்பீர்கள். உறவினர்களால் சிரமங்கள் ஏற்படலாம். கணவன் மனைவி உறவிலும் சின்ன கசப்புகள் தோன்றலாம். இருந்தாலும் அது மிகப்பெரிய பாதிப்பை தராது. அதையும் தாண்டி குடும்பத்தில் கலகலப்பு நிலவும். வீட்டில் சுப காரியம் நடத்துவதற்கான பேச்சுவார்த்தை தொடங்கும். திருமணம் ஆகாமல் இருக்கின்ற ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வாய்ப்பு கை கூடி வரும். நீண்ட நாள் சந்திக்காத நண்பரை சந்திப்பீர்கள்.

எந்த வகையிலயாவது பண வரவு கிடைக்கும். பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் சோர்வு இல்லாமல் வேலை பார்ப்பீர்கள். சிலருக்கு பதவி உயர்வு ஏற்படலாம். அதிகாரிகளின் ஆதரவு சற்று குறைவாகவே இருக்கும். அதைப்பற்றி கவலைப்படாமல் வேலை செய்வீர்கள். அரசு பணியில் இருப்பவர்கள் பொறுப்பை உணர்ந்து வேலை பார்க்க வேண்டும். தொழில் நிமித்தமாக அயல்நாடு செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள் வெளியூர் பயணங்கள் மூலமாக வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். வியாபாரம் சுமாராக இருந்தாலும் பண வரவு தேவைக்கு ஏற்ப கிடைக்கும். வரவு செலவு கணக்குகளில் கவனமாக இருக்க வேண்டும். இல்லத்தரசிகள் இதமான பலனை பெறுகின்ற மாதம் இது. நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளுகின்ற வாய்ப்பு ஏற்படும். வேலைக்கு செல்லும் பெண்களுக்கு சம்பள உயர்வு உண்டாகும். எதிர்பார்த்த இடமாற்றமும் சலுகைகளும் கிடைக்கக்கூடும்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** அஷ்ட்ட லெஷ்மி

**ஸ்லோகம்:** மகாலஷ்மி அஷ்டோத்திரம்

**பரிகாரம்:** மகாலட்சுமியை 5 முக தீபம் ஏற்றி வழிபடுவது

**சந்திராஷ்டமம்:** ஆவணி 25-ம் தேதி 10/09/25 புதன்கிழமை இரவு 7.42 மணி முதல் ஆவணி 27-ம் தேதி 12/09/25 வெள்ளிக்கிழமை இரவு 10.04 மணி வரை.

---

**துலா இராசி அன்பர்களே!**

இந்த மாத ஆரம்பத்தில் ஆனந்தமான நிலை ஏற்படும். குடும்பத்தில் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே சில கசப்புகள் ஏற்பட்டாலும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நடப்பதால் மாத நடுப் பகுதியிலில் மறைந்து போகும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு சில நன்மைகளை கொண்டு வரும். வீட்டில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் சிறப்புடன் இருக்கும்.

பண வரவு தடையில்லாமல் இருக்கும். புதிய பொருட்களை வாங்கும் யோகம் உண்டாகும். வீட்டு தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்வீர்கள். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். பிள்ளைகளின் அன்பு மனதிற்கு ஆறுதலாக இருக்கும். வெளியூர் பயணங்கள் ஏற்படும். பிள்ளைகளின் படிப்புக்காக அரசியல்வாதியின் சிபாரிசை நாட வேண்டியிருக்கும்.

அலுவலகத்தில் சில அத்தியாவசிய வேலைகளை விரைந்து முடிக்க வேண்டிய நிலை உண்டாகும். சக ஊழியர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிலருக்கு இடம் மாறுதல் உண்டாகும். அதிகாரிகளின் ஆதரவு ஓரளவுக்கு கிடைக்கும். மாத இறுதியில் அரசு வேலையில் இருப்பவர்கள் மிகுந்த கவனத்துடன் வேலை பார்க்க வேண்டும். தொழில் வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். மறைமுக எதிர்ப்புகள் மறைந்து போகும். புதிய முதலீடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குடும்ப பொறுப்பை ஏற்றும் நடத்தும் பெண்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் உண்டாகும். வேலைக்கு செல்லும் பெண்கள் அலுவலகத்தில் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். பதவி மாற்றம் இடமாறுதல் போன்ற காரியங்கள் நடக்கலாம்.

**வணங்க வேண்டிய தெய்வம்: பைரவர்**

**ஸ்லோகம்: பைரவர் அஷ்டோத்திரம்**

**பரிகாரம்: பெருமாள் வழிபாடு**

**சந்திராஷ்டமம்: ஆவணி 27-ம் தேதி 12/09/25 வெள்ளிக்கிழமை இரவு 10.04 மணி முதல் ஆவணி 29-ம் தேதி 14/09/25 ஞாயிற்க்கிழமை இரவு 12.36 மணி வரை.**

---

**விருச்சிக இராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவினர்களோடு அனுசரித்து செல்வீர்கள். கணவன் மனைவி இருவரும் கருத்து ஒருமித்து நடப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலையை காணப்படும். சுப நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடைபெறும். உறவினர்களின் வருகையாலும் நண்பர்களின் சேர்க்கையாலும் வீட்டில் சந்தோஷம் நிலவும். தேவைக்கு ஏற்ப பணவரவு இருக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு உற்சாகத்தை தரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி கிடைக்கும். நீண்ட நாள் எதிர்பார்த்த காரியம், மாத மத்திய பகுதியில் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்பான நடவடிக்கை மகிழ்ச்சியை கொடுக்கும். அலுவலகத்தில் திறமையை வெளிப்படுத்துவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டு பக்கபலமாக அமையும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். தொழில் வியாபாரத்தில் சறுக்கல்களை சந்தித்தாலும் மாத இறுதியில் முன்னேற்றம் காணப்படும். போட்டியாளர்களை முறியடிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். குடும்ப பொறுப்புகளை கையில் வைத்திருக்கும் பெண்களுக்கு நன்மைகள் நடக்கும் மாதம் இது. வேலைக்கு செல்லும் பெண்களுக்கு எதிர்பாராத நல்ல செய்தி கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** வேப்பிலை அம்பாள்

**ஸ்லோகம்:** கருமாரி அம்மன் அஷ்டோத்திரம்

**பரிகாரம்:** முருகப்பெருமான் மாவிளக்கு ஏற்றுவது

**சந்திராஷ்டமம்:** ஆவணி 29-ம் தேதி 14/09/25 ஞாயிற்றுக்கிழமை இரவு 12.39 மணி முதல் புரட்டாசி 1-ம் தேதி 17/09/25 புதன்கிழமை அதிகாலை 4.07 மணி வரை




**தனுசு இராசி அன்பர்களே!**

இந்த மாத ஆரம்பத்தில் சில நன்மையான பலன்களை அனுபவிப்பீர்கள். உறவினருடன் சச்சரவு ஏற்பட்டாலும் பொறுமையுடன் அதை அணுகுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அணுக்கமான உறவு இருக்கும். ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். குடும்பத்தில் சந்தோஷமான நிலையே காணப்படும். மங்கலகரமான நிகழ்ச்சிகள் நடக்கும். வருமானம் அதிகரிக்கும். அத்தியாவசிய பொருளை வாங்கும் யோகம் சிலருக்கு ஏற்படும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். மனைவி பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்பு கைகூடிவரும். நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த உதவி வந்து சேரும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தப்பட்ட காரியமாக ஒருவரின் உதவியை நாடுவீர்கள்.

வேலை இடத்தில் அழுத்தம் அதிகமாக இருந்தாலும் கவனமாக கையாள வேண்டும். சிலருக்கு பணி மாறுதல் உண்டாகலாம். மாத கடைசியில் அரசுப் பணியில் உள்ளவர்கள் நிதானமாகவும் எச்சரிக்கையாகவும் செயல்பட வேண்டும். வியாபாரம் வெற்றிகரமாக நடந்தாலும் செலவுகளும் கூடும். எதிர்ப்புகளை தாண்டி வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள்.

குடும்பப் பெண்களின் ஆசைகள் நிறைவேறும். கணவனுக்கு ஒத்துழைப்பாக நடந்து கொள்வார்கள். சுயமாக தேவைகளை பூர்த்தி செய்வார்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சிறப்பான நன்மை உண்டாகும். சலுகைகள் கிடைக்கக்கூடும்..

**வணங்க வேண்டிய தெய்வம் :** குருவை வணங்கி வழிபடுதல்

**ஸ்லோகம்:** குரு ஸ்லோகம்

**பரிகாரம்:** தக்ஷிணாமூர்த்தி மஞ்சள் வஸ்த்திரம் சாற்றுவது

**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 1-ம் தேதி 17/09/25 புதன்கிழமை அதிகாலை 4.08 மணி முதல் புரட்டாசி 3-ம் தேதி 19/09/25 வெள்ளிக்கிழமை காலை 9.32 மணி வரை.




**மகர இராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கம் முதல் நன்மையான பலன்கள் ஏற்படலாம். குடும்பத்தில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிலவும். சுப நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை செய்வீர்கள். நண்பர்களும் உறவினர்களும் ஒத்துழைப்பாக இருப்பார்கள். கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட்டு குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். தள்ளிப்போன திருமண ஏற்பாடுகள் சுகமாக நடந்து முடியும். தாய் தந்தையரின் தேவையை பூர்த்தி செய்யும் வாய்ப்பு பிள்ளைகளுக்கு உண்டாகும் குடும்ப உறுப்பினர்களின் ஆசையை உணர்ந்து அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்வீர்கள். மேல்படிப்புக்காக வெளிநாடு செல்ல வேண்டிய நிலை சிலருக்கு உண்டாகும். அலுவலகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். வேலைகளை கவனமுடன் செய்ய வேண்டும். எதிர்பார்த்த இடம் மாறுதல் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு உற்சாகத்தை கொடுக்கும். மாதக் கடைசியில் அரசு பணியில் இருப்பவர்களுக்கு ஒரு நல்ல செய்தி வந்து சேரும். இருந்தாலும் வேலையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தொழிலில் புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். வியாபாரம் சிறப்பாக நடந்து வருமானத்தை கொடுக்கும். மறைமுகமான எதிர்ப்புகளை தாண்டி புதிய முயற்சியில் இறங்குவீர்கள். வரவு செலவு கணக்குகளில் கவனமுடன் ஈடுபட வேண்டும்.

குடும்பத்தை நிர்வாகம் செய்யும் பெண்களுக்கு நல்ல செய்திகள் வரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு நன்மைகள் உண்டாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** சனிஸ்வரர்

**ஸ்லோகம்:** நவக்கிரஹ ஸ்லோகம் சொல்லுதல்

**பரிகாரம்:** சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது

**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 3-ம் தேதி 19/09/25 வெள்ளிக்கிழமை காலை 9.33 மணி முதல் புரட்டாசி 5-ம் தேதி 21/09/25 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.18 மணி வரை.




**கும்ப இராசி அன்பர்களே!**

இந்த மாதம் ஆரம்பம் அற்புதமான பலன்களை தருவதாக அமையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கணவன் மனைவி உறவு பலப்படும். முரண்பாடுகள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்களுடன் இருந்த கசப்பான உணர்வுகள் மறைந்து போகும். எப்படி இருந்தாலும் குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலையே காணப்படும். ஆபரண யோகம் உண்டாகும். வீட்டிற்கு தேவையான மின்சார பொருட்களை வாங்குவீர்கள். மின்னணு சாதனங்களையும் கொள்முதல் செய்வீர்கள். உறவுகளால் நன்மைகள் உண்டாகும். வீட்டில் உள்ளவர்களின் ஆசையை நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணங்கள் மேற்கொள்வீர்கள். வேலை இடத்தில் அதிகமாக உழைப்பை போட வேண்டிய சூழ்நிலை உண்டாகும். நிதானமாக வேலை பார்க்க வேண்டும். இடமாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டு. மாத இறுதியில் அரசுப் பணியாளர்கள் மிகவும் கவனத்துடன் வேலை பார்க்க வேண்டும். வியாபாரம் சரளமாக நடக்கும். போட்டியாளர்களை கருத்தில் கொள்ளும் வேண்டாம். பாதிப்பு எதுவும் இருக்காது. பணம் வரவு செலவுகளில் தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ளவும். குடும்ப பொறுப்பை கையில் வைத்திருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய அதிகரிப்பு போன்ற சலுகைகள் கிடைக்கக்கூடும்..

**வணங்க வேண்டிய தெய்வம்:** பைரவர்

**ஸ்லோகம்:** பைரவர் ஸ்லோகம்

**பரிகாரம்:** சனிபகவான் எள் தீபம் ஏற்றுவது

**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 5-ம் தேதி 21/09/25 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.19 மணி முதல் புரட்டாசி 8-ம் தேதி 24/09/25 புதன்கிழமை அதிகாலை 3.24 மணி வரை.




**மீனஇராசிஅன்பர்களே!**

மாத ஆரம்பத்தில் அமர்க்களமான பலன்கள் கிடைக்கக்கூடும். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நடப்பதால் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். குடும்ப நலன் குறித்த முடிவுகளை நிதானமாக எடுப்பது நல்லது. விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அடுத்தடுத்து ஏற்படும். உறவுகளில் மனக்கசப்பு இருந்தாலும் முக்கிய நிகழ்ச்சிகளில் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படும். குடும்பத்துடன் வெளியூர் பயணங்கள் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். பிள்ளைகளின் நடவடிக்கை மனதிற்கு நிம்மதியை தரும்.வேலை இடத்தில் சில பிரச்சனைகள் உருவாகலாம். நிதானமாகவும் அக்கறையாகவும் வேலை செய்ய வேண்டும். சிலருக்கு இடம் மாற்றத்தை எதிர்பார்க்கலாம். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். வியாபாரம் சிறப்பாக நடக்கும். இடையூறுகள் விலகும். வருமான பாதிப்பு எதுவும் இருக்காது. கொடுக்கல் வாங்கல் பிரச்சனையில் நிதானமாக நடக்கவும். இல்லத்தரசிகள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வமாக இருப்பார்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள் நன்மை அடைவார்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம் :** பாலா அம்பாள்

**ஸ்லோகம்:** மீனாட்சி பிள்ளை தமிழ் ஸ்லோகம்

**பரிகாரம்:** மீனாட்சியம்மனுக்கு நெய்தீபம் ஏற்றுவது

**சந்திராஷ்டமம்:** புரட்டாசி 8-ம் தேதி 24/09/25 புதன்கிழமை அதிகாலை 3.25 மணி முதல் புரட்டாசி 10ம் தேதி 26/09/25 வெள்ளிக்கிழமை பகல் 2.59 மணி வரை.



# அடமான கடன்கள் சட்டம்




சொத்துக்களை அடமானமாகக் கொடுத்து கடன் பெறுவது அடமானக் கடன், பணம் கொடுப்பவரிடமே சொத்தை ஒப்படைத்து விடுவது. பணம் கொடுத்தவர் சொத்தை அனுபவித்து வருவார்.

கடன் வாங்கியவர் எப்போது பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறாரோ அன்று அவர் சொத்தை திரும்ப பெற முடியும். அதுவரை கடன் கொடுத்தவரே சொத்தின் சொந்தக்காரர் போல சொத்தை அனுபவிப்பார். ஒருவேளை கடன் வாங்கியவர், கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போய்விட்டால், அவ்வளவுதான், கடன் கொடுத்தவருக்கே சொத்து சொந்தமாகிவிடும்.கடன் வாங்கியவர் சொத்தை இழந்துவிட வேண்டியது தான்.

இப்படித்தான் பழங்காலத்தில் கடன் வாங்கி, சொத்தை அடமானம் வைத்திருக்கிறார்கள். அந்த வகை அடமானத்தை 'மார்ட்கேஜ்' (Mortgage) என்பர்.mort மார்ட் என்றால் இறந்த என்று பொருள், gage என்றால் பிணை என்று பொருள்.

மார்ட்கேஜ் என்பது பிரெஞ்ச் வார்த்தை. இதைத்தான் இங்கிலாந்து சட்டம் Morguam vadium (or Dead Pledge) என்று சொல்கிறது. அப்படி அடமானம் வைக்காமல், சொத்தை ஒப்படைத்து அதில் வரும் வருமானங்களை மட்டும், கடன் கொடுத்தவர் அனுபவித்துக் கொண்டு வந்து, ஒரு காலக்கட்டத்தில் சொத்தை திரும்ப ஒப்படைப்பது என்பது ஒரு வகை அடமானம். இதில் சொத்து பறிபோகாது, இதை இங்கிலாந்து சட்டம் Vivium Vadiam (or Living Pledge) என்கிறது.

இப்படித்தான் பழங்காலங்களில் அடமானங்கள் இருந்திருக்கின்றன. அடமானக் கடன் வாங்குவது என்பது கிட்டத்தட்ட சொத்தை விற்பதற்குச் சமம். கடனை திரும்பிக் கொடுத்தால் மட்டுமே சொத்து திரும்பக் கிடைக்கும். இல்லையென்றால், கடன் கொடுத்தவரின் சொத்தாகிவிடும்.

இந்தியாவில் இப்படிப்பட்ட அடமான முறைதான் வழக்கத்தில் இருந்திருக்கிறது. கடன் கொடுத்தவருக்கு சொத்தை கிரயமாகக் கொடுத்து விடுவது. கடன் வாங்கியவர், பணத்தை திரும்பிக் கொடுக்கும்போது, கடன் கொடுத்தவர் சொத்தை மறுகிரயம் எழுதிக் கொடுப்பார்.

இதை சென்னை மாகாணத்தில், 'அவதி விக்கிரயம்' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தி வந்துள்ளனர். இது ரோமன் சட்டத்தில் உள்ள பிடுசியா Fiducia அடமான முறை ஆகும். (Fiducia- கடன் வாங்குபவர், அவரின் சொத்தை முழு உரிமையுடன் கிரயமாக, கடன் கொடுத்தவருக்கு எழுதிக் கொடுத்துவிடுவது)

மற்றொரு அடமான கடன் முறைப்படி, சொத்தின் உரிமையாளர், கடன் வாங்கும்போது, அவரின் சொத்தை, கடன் கொடுத்தவருக்கே கொடுத்து விடுவார். ஆனால், கடன் கொடுத்தவர், அந்த சொத்தை வட்டிக்காக, அல்லது அசலுக்காக, அந்தச் சொத்தில் வரும் வருமானங்களை அனுபவித்துக் கொள்வார். ஒரு குறிப்பிட்ட கால முடிவில்,அந்த சொத்தை, கடன் வாங்கியவருக்கே (அந்த சொத்தின் உரிமையாளருக்கே) திரும்ப ஒப்படைத்து விடுவார்.

இதில் அந்த அடமானச் சொத்து திரும்ப கிடைத்து விடும். சொத்து பறிபோகாது. இந்த முறைக்கு ரோமன் சட்டத்தில் பிக்னஸ் அடமானம் Pignus என்று பெயர். இங்கிலாந்தில் இதை யூசுபிரக்சுரி அடமானம் Usufructuary mortgage என்று பெயர். Use the Fruits. பலனை அனுபவித்துக் கொள் என்பதாகப் பொருள். இந்த வகை அடமானமுறை தென் இந்தியாவிலும் இருந்திருக்கிறது. இதையே 'போக்கிய அடமானம்' அல்லது 'சுவாதீன அடமானம்' என்று சொல்வர்.மலபார் பகுதியில் இதையே 'கனம்ஷ அல்லது 'ஒத்தி' என்று சொல்வர்.

முகமதிய சட்டத்திலும், அவதி விக்கிரயம் என்ற வகை அடமானம் போன்றே அடமான முறை இருந்திருக்கிறது. அதற்குப் பெயர் 'பை-பில்-வாபா' "Bye-bil-wafa" என்று பெயர். இதில் வட்டிப் பிரச்சனை இல்லை. குரான் கட்டளைப்படி முகதியர் எவரும் வட்டி வசூல் செய்யக் கூடாது. எனவே, கடன் வாங்கியவர் சொத்தை, கடன் கொடுத்தவருக்கு கிரயமாகவே கொடுத்துவிட வேண்டும். அந்த தொகையுடன் மேலும் ஒரு தொகை சேர்த்து திரும்பக் கொடுக்கும் காலத்தில், மறு கிரயம் எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும்.

தகவல்: குரு.சரவணன்

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**


எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்.
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
JCB, டிப்பர் வாடகைக்கு கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
-:: தொடர்புக்கு ::-
Prop: S.அன்வர்தீன் ✆ 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு, பாலக்கரை, திருச்சி- 620 008.


மாத மாதம் வருமானம் தரக்கூடிய வீட்டு மனைகள்
கொடைக்கானல், பெரும்பாறை
ஏலக்காய், வாழை, பலா, அவகாடோ, மிளகு, பட்டை, கிராம்பு, காபி, பாக்கு மரம், சில்வர் ஓக் போன்ற மரங்களுடன் சொத்து
APPROVED
DTCP
APPROVED
சதுர அடி ரூ.500 மட்டுமே
SR PROPERTIIES
REAL ESTAE, MARKETING
தொடர்புக்கு: ✆ 786 78 28 203, 638 298 5562

**POLICE PARVAI TAMIL MONTHLY** R.Dis.No.1132/2015 RNI. **TNTAM/2015/66520**,
Date of publication Everymonth 1st week. **Postel Registration Number TN/TBM/187/2023-25**
Posted between 8-14 Every Month. **Posted at - patrikachannel Egmore**




TO

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542